பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | புரட்டாதி 15 வியாழக்கிழமை 03.10.2019 | கதிர் 332

**இனி இது ரகசியம் அல்ல!**

கோட்டாபயவுக்கு எதிரான வழக்குத்தான் இப்போது அதிகம் பேசப்படும் விடயம். அதுபற்றி அறியவே வாசகர்களும் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர்.

அந்த வழக்கின் போக்கு ஊசல் (பென்டூலம்) போல மாறி மாறி அங்கும் இங்கு பக்கம் 02 »

# தமிழ் பொது வேட்பாளர் குறித்து சம்பந்தனிடம் நேரில் கோரிக்கை

## "நீங்களும் யோசியுங்கள்; நானும் யோசிக்கிறேன்" சுயாதீனப் பிரதிநிதிகளிடம் அவர் இப்படிப் பதில்



கொழும்பு, ஒக்ரோபர் 03

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது குறித்து கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனை நேற்று நேரில் சந்தித்து வலியுறுத்திய சுயாதீனத் தமிழ்க் குழு, அவரைக் களம் இறங்கும்படியும் வலியுறுத்தியது என அறியவந்தது.

வேட்புமனுவுக்கு கட்டுப்பணம் செலுத்துவதற்கு இன்றும் மூன்று நாள்களே இருக்கையில் "இது குறித்து நானும் யோசிக்கிறேன்; நீங்களும் யோசியுங்கள்!" - என்று பதில் கூறி அக்குழுவை அனுப்பி வைத்தார் சம்பந்தன் என்றும் தெரிவிக்கப்பட்டது. பக்கம் 03 »

## சுயாதீனக் குழு தொடர் சந்திப்பு
## நேற்று - கஜேந்திரகுமாருடன் இன்று - யாழில் விக்கியுடன்

கொழும்பு, ஒக்டோபர் 03

நேற்று நண்பகல் கொழும்பில் சம்பந்தன் எம்.பியைச் சந்தித்து விரிவான பேச்சுகளில் ஈடுபட்ட சுயாதீனத் தமிழ்க் குழு நேற்று மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைச் சந்தித்துப் பேசியது.

அக்குழு இன்று மதியம் யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வீ. விக்னேஸ்வரனைச் சந்தித்துப் பேசவுள்ளது. பக்கம் 03 »

## கோட்டாவின் குடியுரிமை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஒக். 03

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவின் இலங்கைப் பிரஜாவுரிமைச் சான்றிதழின் செல்லுபடித்தன்மையை சவாலுக்கு உட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை பக்கம் 03 »

## கோட்டா மீது சிலருக்கு அச்சம் அதனாலேதான் வழக்குகளாம்!

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய ஒரே நபர் கோத்தாபய ராஜபக்ஷதான் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பக்கம் 03 »

## ஆனையிறவு விபத்தில் ஹையஸ் சாரதி சாவு
### வெளிநாட்டவர் படுகாயம்



யாழ்ப்பாணம், ஒக்.03

கிளிநொச்சி ஆனையிறவு தட்டுவங்கொட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஹையஸ் சாரதி சம்பவ பக்கம் 03 »

## தமிழர்களின் சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் இந்தியா உதவ வேண்டும் என்கிறார் சி.வீ.கே.!

- எஸ்.நிதர்ஷன் -

ஈழத் தமிழ் மக்களுக்குடைய சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் இந்தியா உதவ வேண்டுமென வடக்கு மாகாண அவைத் தலைவரும் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளருமான பக்கம் 03 »

## வீதிகளைப் புனரமைக்க வலியுறுத்தி பிரமந்தனாறில் நேற்று கவனயீர்ப்பு

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த பிரமந்தனாறு கிராம மக்களும், அப்பிரதேச மாணவர்களும் உள்ளூர் வீதிகளை புனரமைக்கக் கோரி நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். பக்கம் 03 »

## வெளிநாட்டு விமான நிறுவனங்கள் உள்ளூர் சேவைகளை நடத்தலாம்
### அனுமதி அளிக்கிறது இலங்கை அரசு

கொழும்பு,ஒக்.03

வெளிநாட்டு விமான நிறுவனங்கள் இலங்கையின் உள்நாட்டு விமான நிலையங்களுக்கு சேவைகளை நடத்துவதற்கு, இலங்கை அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

தற்போதுள்ள இரு தரப்பு பக்கம் 03 »

## இனவாதமே நாட்டின் அரசியலாக மாறியுள்ளது ஜே.வி.பியின் அனுரகுமார யாழில் நேற்று விசனம்





- எஸ்.நிதர்ஷன் -

இனவாதமே நாட்டின் அரசியலாக மாறியுள்ளமை வேதனைக்குரியது.

– மேற்கண்டவாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் 'மக்கள் சக்தி'யின் ஜனாதிபதி வேட்பாளருமாகிய அனுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார். பக்கம் 02 »

## நீராவியடியில் இந்து ஆலயம் ஏதும் இருக்கவேயில்லையாம்!
### அடித்துக் கூறுகின்றார் எஸ்.பி.

கொழும்பு, ஒக். 03

முல்லைத்தீவு – நாயாறு பகுதியில் எந்தவொரு இந்து ஆலயமும் இருக்கவே பக்கம் 03 »

## இனவாதமே..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'வீழ்ச்சியடைந்த தேசத்தைக் கட்டியெழுப்புவோம் நாம்' – எனும் தொனிப்பொருளில் மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் யாழ் ரிம்மர் மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற மக்கள் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :–

வடக்கில்பெரும்ஜனத்தொகை உள்ளது. இந்த மக்கள் தத்தம் செயற்பாடுகளைச் செய்வதற்கு போதிய வசதிகளோ நிலைமைகளோஇங்குஇல்லை.இங்கிருந்தும் இருக்கின்றதுமான நிலைமைகளை அரசியல்வாதிகள் தமக்காகப் பயன்படுத்தப் பார்க்கின்றனர். இதுதான் இங்கு பல காலமாக நடந்த வருகின்றது.

கடந்த காலங்களில் – அதாவது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் – இங்கு தங்களுக்கு ஆதரவு இல்லை என்பதால் என்னவெல்லாம் செய்தார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். ஜனநாயகத் தேர்தல்களில் அந்த விதிமுறைகளையே மீறிச் செயற்பட்டார்கள்.

அத்தோடு இங்குள்ள மக்களின் வளங்களையும் அழித்தார்கள். இதற்காக தெற்கிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று காமினிகள் வந்தார்கள். அவ்வாறு வந்து இறங்கிய காமினி லொக்குகே, காமினி திஸநாயக்க, காமினி பெரேரா என மூன்று பேர் தலைமையில் வந்தவர்கள் என்ன செய்தார்கள் என்பது தெரியும். அவர்கள் ஜனநாயக உரிமையைப் பறித்தார்கள், யாழ் நூலகத்தைத் தீயிட்டு எரித்தார்கள். அழிவுகரமான செயற்பாடுகளைச் செய்தார்கள்.

வடக்கு மக்களின் எதிர்காலத்தை கட்டியெழுப்பும் பிரதான பாதை கல்வி ஆகும். அதையே அவர்கள் அழித்தார்கள். இங்கு கல்விக்கான உரிமை ஒடுக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்தக் கல்வியை நாங்கள் கட்டியெழுப்புவோம். அதற்கான கல்விக் கொள்கைத் திட்டத்தை உருவாக்குவோம். அதனூடாக கல்வியில்யில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

இதே போல சுகாதாரப் பிரச்சினைகளும் இருக்கின்றன. குழந்தைகள், கர்ப்பிணிகள் எனப் பாதிப்பு தொடர்கிறது. ஆனால் ஆட்சியாளர்களுக்கு அது பிரச்சினையில்லை. ஏனெனில் அவர்களுக்கு இதனால் பாதிப்பு இல்லைதானே. ஆக ஆட்சியாளர்களின் குழந்தைகள் மட்டும்தான் குழந்தைகளா என்று கேட்கிறோம்.

இந்த நாட்டில் இனவாதத்தைப் புறக்கணிப்பதே எமது அரசியல் பயணத்தின் பாதையாக அமைகிறது. எந்தவகையான இனவாதத்திற்கும் நாம் இடமளிக்கக் கூடாது. ஆனால் இனவாதம் நாட்டில் அரசியலாக மாறியுள்ளது. எங்கள் நாட்டில் அந்த இனவாதமே யுத்தத்தை உருவாக்கியது. இதனால் வடக்கிலும் தெற்கிலும் குழந்தைகளை யுத்தத்திற்குக் காவு கொடுத்தோம்.

ஆனால் இந்த முப்பது வருட யுத்தத்தில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்த அல்லது செய்யும் எந்த ஓர் உறுப்பினரின் குழந்தைகள் யாரும் இறந்தார்களில்லை. ஆனால், வடக்கிலும் தெற்கிலும் இனவாதத்தை தூண்டியவர்கள் யார் என்றால் அரசியல்வாதிகள்தான். வடக்கு,கிழக்கிலும் தெற்கிலும் சாதாரண தாய்,தந்தையரின் குழந்தைகளைப் பலிகொள்ளும் விதத்தில் மீண்டும் ஒரு தடவை இனவாதத்திற்கோ அடிப்படை வாதத்திற்கோ இடமளிக்கக் கூடாது.

இனவாதத்திற்கு எதிரான தேசிய அரசியல் ஒற்றுமையே எம்மிடம் உள்ளது. அந்த ஒற்றுமையை எவ்வாறு உருவாக்கலாம், அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று பார்க்க வேண்டும். இந்த நாட்டில் எந்த ஒரு குடிமகனையும் இரண்டாம் நிலைக் குடிமகனாக மாற்ற முடியாது.

நான்அண்மையில்கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனைச் சந்தித்தேன். அவர் என்னிடம், தம்மை இலங்கைக் குடிமகன் என்று தன்னை அறிமுகப்படுத்திச் சொல்ல தனக்கு விருப்பம் என்றும், ஆனால் இலங்கையின் இரண்டாம் நிலைக் குடிமகனாகத் தன்னைச் சொல்லிக் கொள்ளத் தனக்கு விருப்பமில்லை என்றும் கூறியிருந்தார்.

நாங்கள் அதை ஏற்றுக் கொள்கிறோம். எங்கள் நாட்டில் முதலாம் நிலை, இரண்டாம் நிலைக் குடிமக்கள் என அப்படியாக இருக்க கூடாது. நாம் பேசுகின்ற மொழியின், கலாச்சாரத்தின் அடிப்படையில் எங்களிடையே வித்தியாசம் இருக்கக் கூடாது. கொள்கை அடிப்படையில் ஒருமித்த செயற்பாடு வேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் இந்த நாட்டில் சமமாக மதிக்கப்பட வேண்டும். நாங்கள் சட்டம் உருவாக்குவதே அனைவருக்கும் தான். மதம் என்பது உங்கள் நம்பிக்கை. அதில் உயர்வு – தாழ்வு என இருக்கக் கூடாது.

தமிழ், சிங்களம், முஸ்லீம் என்பதில் ஒன்று உயர்வு, ஒன்று தாழ்வு என்று கருத முடியாது. இவ்வாறு உயர்வு, தாழ்வு என்று கருதுவதை இல்லாமல் ஒழிக்க வேண்டும். அதை அரசமைப்பிலும் சட்டத்திலும் கூடச் செய்ய வேண்டும். சாதாரண மக்களுக்கு அப்படியான சட்டக் கோவையை நாம் பெற்றுத் தருவோம். எந்தவொரு வகையிலும் வித்தியாசமாக நடத்தப்படாத, ஏற்றத் தாழ்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

நாம் அனைவரும் ஒரு சகோதரர்கள். நாம் இந்த நாட்டின் பிரஜைகள். இந்த நாட்டில் பிறந்து, இந்த நாட்டிலேயே நாம் இறக்கின்றோம். எங்களிடையே வேறு என்ன வித்தியாசம்? எந்தவொரு வித்தியாசத்திற்கும் இடமளிக்காத – எல்லா வித்தியாசங்களையும் புறக்கணிக்கின்ற – ஒரு சமுதாயத்தை நாம் உருவாக்குவோம். உங்கள் கையில் இருக்கும் அரசியல் பலத்தை அனைத்து மக்களுக்குமாகப் பயன்படுத்த வேண்டும்.

அரசியல் பலத்தில் இருந்து யாரும் தனிமைப்படுத்தப்படக் கூடியதான ஆட்சி உருவாகக் கூடாது. அதனால் நாம் உருவாக்கும் ஆட்சியானது தமிழ், சிங்களம், முஸ்லிம் என்றோ, வடக்கு, கிழக்கு, தெற்கு என்றோ வித்தியாசம் இல்லாமல் இருக்கும். அரசியல் பலத்தில் சம உறுப்பினர்களாக மாறுகின்ற அப்படியொரு மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

கடந்த காலங்களில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் நடந்தன. அதற்காக அனைத்து மக்களிடமும் சென்றனர். அவ்வாறு சென்ற அந்தக் குழுவின் பிரதிநிதிகள் இப்போது இங்கு இருக்கின்றனர். ஆகையினால் அதன் போது என்ன நடந்தது என்பதுதெரிகிறது.

நாம் அனைவரும் இந்த நாட்டில் சமமான மக்களாக, சகோதரத்துவத்துடன் ஒன்றாக வாழக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும். எங்கள் தலைமுறை யுத்தம் செய்தது. இந்த மண் தேவையான அளவு இரத்தத்தால் ஈரமானது. எங்களுடைய தாய், தந்தையர் தேவையான அளவு கண்ணீர் சிந்தினர். அந்த நிலைமையை எதிர்கால குழந்தைகளுக்கு விட்டுச் செல்லக் கூடாது. மீண்டும் எமது நாட்டில் அப்படியான நிலைமைக்கு இடமளிக்கக் கூடாது. அது இந்த தலைமுறையின் கடமை.

தெற்கில் இனவாதக் கட்சிகள் தங்களுடைய இலாபத்திற்காகப் பல வகையான இனவாதத்தை வளர்த்தனர். அரசமைப்பு உருவாக்கக் கலந்தரையாடல் 72 தடவைகள் நடந்தன.

அதில் ஒரு நாள் ரணில் விக்கிரமசிங்க பேசியது ஒரேயொரு வாக்கியம் மட்டும்தான். அரசமைப்புத் தொடர்பான கலந்துரையாடலில். இதை செய்வதைத் தடுக்கும் வகையிலையே செயற்பட்டனர்.

அதனால் இவர்கள் மக்களுக்குக் கொடுத்தது ஏமாற்றம் மட்டும் தான். உண்மையான சகவாழ்வு என்பது உயிருடன் கூடிய உரிமை.

வடக்கை மட்டுமல்ல, தெற்கையும் ஒவ்வொரு நாளும் ஏமாற்றுகின்றனர். இவ்வாறு மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்ற இடமளிக்க வேண்டுமா? ஆகவே, எமது நாட்டுக்கு புதிய அரசியல் கலாச்சாரம் தேவை.அதைக் கட்டியெழுப்புவோம் என நாம் நம்புகின்றோம்.

மக்களை எமாற்றாது, வறுமையை விற்பனை செய்யாது, மக்களுக்கு உண்மையை கூறுகின்ற, மக்

பக்கம் 13 »

## இனி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக நிலை மாறுவதுதான் இன்னும் டென்ஷனைக் கூட்டியிருக்கின்றது.

கோட்டாவின் இலங்கைக் குடியுரியையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் சட்ட ரீதியாகச் செல்லுபடியற்றது என்பதை – உத்தரவிடுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்றது மட்டுமல்லாமல், அந்தச் சான்றிதழ் செல்லுபடியற்றது என்பது தொடர்பான இடைக்காலத் தடை உத்தரவு விடுக்கும் மனுதாரரின் கோரிக்கையை அடுத்த இரண்டு நாள்களில் பரிசீலித்து மூன்றாம் நாள் (அதாவது நாளை) முடிவை அறிவிக்கப் போவதாகத் தெரிவித்ததும் கோட்டா தரப்பின் நாடி உண்மையில் விழுந்துதான் போனது.

திங்களன்று ஜனாதிபதித் தேர்தல் வேட்புமனுவைத் தாக்கல் செய்வதற்கு மாற்று வேட்பாளரைத் தேட வேண்டுமோ என்ற இக்கட்டுக்கு அத்தரப்பு தள்ளப்பட்டது.

ஆனால், நேற்றைய நீதிமன்ற விசாரணையின் போக்கு கோட்டா தரப்புக்கு தெம்பை – புதுத் தைரியத்தை – தந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

அரசுத் தரப்பில் – குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் சார்பில் – முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல், அமைச்சரவை இல்லாத சமயத்தில், சம்பந்தப்பட்ட அமைச்சரின் பொறுப்பை ஏற்று, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அப்படி ஒரு பிரஜாவுரிமைச் சான்றிதழை ஒருவருக்கு வழங்கலாம், ஜனாதிபதிக்கு அந்த உரிமை உண்டு என்ற வாதத்தை முன்வைத்த போது, கோட்டா தரப்பினரின் முகங்கள் பிரகாசமாகிப் போகின என்பது உண்மைதான்.

கோட்டாபயவின் வேட்பாளர் உரிமையை இந்த வழக்கின் மூலம் தடுத்துவிட முகாந்திரம் ஏதும் இல்லை என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கூறியிருக்கின்றார்.

'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' வழக்கில் சர்ச்சைக்குரிய தீர்ப்பை அதிரடியாக வழங்கி, 2005 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து பறிபோகாமல் காப்பாற்றியமை உட்பட பல சட்டத் திருகுதாளங்களின் பிதாமகர் அவர்.

அத்தகையவரின் கருத்தை நம்பி ஒரு முடிவுக்கு – தீர்மானத்துக்கு – வர முடியாது.

ஆனால், இலங்கையின் மற்றொரு பிரதம நீதியரசரும் இத்தகைய கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார். தனது துணிச்சலான தீர்ப்புகளினால் சட்ட வட்டாரங்களில் பெரிதும் மதிக்கப்படும் அவர், தமது பெயரை வெளியிட விரும்பாமையினால் அதனை நான் இங்கு குறிப்பிடவில்லை.

ராஜபக்ஷக்களின் போக்குக்கு உடன்பட்டு வராதவர் அவர். இந்த வழக்கு மூலம் கோட்டாவின் வேட்பாளர் உரிமை பறிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு என்று அவர் கூறுகின்றார்.

ஆனல், சுயாதீன சட்ட வட்டாரங்கள் இந்த வழக்கில் கத்தி கோட்டா தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது, எந்நேரமும் அது அவர் தலை மீது விழலாம் என உறுதியாகக் கூறுகின்றன.

அதுவும், அமைச்சரவை இல்லாத சமயத்தில் ஓர் அமைச்சரின் பணியை – கடமையை – ஜனாதிபதி தன்பாட்டில் பிரயோகிக்கும் அதிகாரம் அவருக்கு உண்டா என்பது தொடர்பில் ஜனாதிபதிக்குப் பாதகமான உயர்நீதிமன்றின் முற்கூட்டிய வழிகாட்டல் தீர்ப்புகள் ஏற்கனவே உள்ளன என்று கூறப்படுகின்றது.

அதில் ஒன்று, இப்போது கோட்டாவுக்கு ஆதரவான சட்டக் கருத்தை வெளியிடும் முன்னாள் பிரதமர் நீதியரசர் சரத் என் சில்வாவும் சேர்ந்து வழங்கிய தீர்ப்பு.

அடுத்தது – அரசமைப்புத் திருத்தம் ஒன்றின் மீது உயர் நீதிமன்றத்தின் ஏழு நீதியரசர்கள் ஆயம் வழங்கிய தீர்ப்பு.

இந்த வழிகாட்டல் தீர்ப்புகள் பெரும்பாலும் இன்று மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றத்தில் அவர்கள் தரப்பு வாதத்துக்கு ஆதாரமாக முன்வைக்கப்படும் போது, வழக்கின் போக்குத் தொடர்பான ஊசல் கோட்டாவின் பக்கத்துக்கு எதிர்த் திசைக்குப் போகும் ஏது நிலைமை உள்ளது.

எது, எப்படி என்றாலும் நீதிமன்றின் முடிவு நாளை வந்து விடும்தானே. அதுவரைப் பொறுத்திருந்தால் முடிவு கிட்டிவிடும். அவசரப்படாமல் பார்த்திருப்போம்.

★ ★ ★

வேறு ஒரு விடயம் தொடர்பாக கடந்த திங்களன்று தேர்தல் ஆணையகத்துக்குச் சென்றார் நமது 'பயர் பிராண்ட்' அரசியல்வாதி சிவாஜிலிங்கம்.

ஆணையாளர் கூலைச் சந்தித்துக் கூலாகப் பேசி விட்டு அவர் வந்து விட்டார்.

ஆனால், இங்கு கதை – வதந்தி – இறக்கை கட்டிப் பறக்க ஆரம்பித்துவிட்டது.

இம்முறையும் ஜனாதிபதித் தேர்தலில் சிவாஜிலிங்கம் சுயேச்சையாகக் குதிக்கின்றார்; அதற்கான முன்னேற்பாட்டுக்காகத் தான் தேர்தல் ஆணையகத்துக்கு அவர் சென்றார் என்றெல்லாம் கதைகள் பரவின.

அவரிடமே நேரடியாகக் கேட்டேன். ஒரே சொல்லில் அப்படி எதுவுமே இல்லை என்று மறுத்து விட்டார் அவர். அதை நம்புவோமாக!

★ ★ ★

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பொதுவான ஒரே நிலைப்பாட்டில் அணுகுவது தொடர்பாக தமிழ் மக்கள் பேரவையின் தற்போதைய முயற்சிகள் சம்பந்தமாக இரண்டு சந்தேகங்கள்.

ஒன்று – பேரவை நியமித்துள்ள சுயாதீனக் குழு, பேரவையின் கட்டுப்பாடின்றி சுயாதீனமாக இயங்கும் என்பது நல்ல விடயமே. அப்படியானால் அக்குழுவின் நேற்றைய சந்திப்புப் பற்றிய விளக்க அறிக்கை அந்தக் குழுவிடம் இருந்துதானே வந்திருக்க வேண்டும்? பேரவையிடமிருந்து அல்லவே...?

அடுத்தது – அந்த சுயாதீனக் குழுவிடம்தான் இந்த விடயம் குறித்துக் கேட்க வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனைச் சந்திக்க நீங்கள் அனுமதி கோரியபோது சம்பந்தனை மட்டும் தனியாகச் சந்திக்க விரும்புகின்றீர்கள் என்று தெளிவாகவும், திட்டவட்டமாகவும் நீங்கள் தெரிவித்திருந்தீர்கள் என்பதை மிக மிக உறுதியாக என்னால் அறிய முடிந்தது. சம்பந்தரே அப்படி நீங்கள் கோரியிருக்கின்றமையை (நிபந்தனை விதித்திருக்கின்றமையை) தமக்கு நெருக்கமானவர்களிடம் பகிர்த்திருக்கின்றார்.

சரி. அப்படிக் கேட்பது சுயாதீனக்குழுவான உங்களின் உரிமை. அதை நாம் ஏன் என்று கேள்விக்கு உட்படுத்த முடியாது.

அப்படி என்றால், கஜேந்திரகுமாரை மட்டும் அவரது ரத, கஜ, துராதிகளுடன் – செ.கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன், சட்டத்தரணி சுகாஷ் ஆகியோருடன் – நீங்கள் சந்தித்தமை எப்படி நியாயமாகும்?

இன்று நீங்கள் விக்னேஸ்வரனை அவரது கட்சியினருடன் சந்திப்பதாகத்தான் பேரவையின் நேற்றைய அறிக்கை கூறுகிறது.

இந்தப் போக்கு, நடுநிலை அணுகு முறை என்று கூறப்படும் உங்களின் பாங்குக்கு ஒரு பிசிறு அல்லவா?

தமிழ்க் கூட்டமைப்புடன் இந்த அணுகு முறையில் ஊடாடி, நீதி, நியாயமான ஓர் இணக்கத்தை எட்டலாம் என்று நீங்கள் நம்பினால் உங்கள் அரசியல் மேதாவித்தனம் எப்படி எடை போடப்படும்?

நேரடியாக விடயத்துக்கு வருகிறேன். சுமந்திரனை வெட்டி ஒதுக்கி விட்டு, சம்பந்தன் ஐயாவைத் தனித்து உங்களால் உங்கள் வழிக்குக் கொண்டு வரலாம், அதுவும் அடுத்த சில நாள்களுக்குள் முடிவெடுக்க வேண்டிய ஒரு விடயத்துக்கு சம்பந்தனை இணங்கி, இழுத்து வரலாம் என்று நீங்கள் கருதினால், அதன் சாத்தியப்பாடு எள்ளிநகையாடுவதாகவே இருக்கும். அது சரியா, பிழையா என்பதல்ல. அதுதான் நிலைமை. யதார்த்தம்.

யதார்த்த பூர்வமாக அமையாத – நடைமுறைச் சாத்தியமற்ற – அரசியல் சித்தாந்தங்களிலும், கோட்பாடுகளிலும் விழுந்து விட்டவர்களுடன் முன்னர் அணி சேர்ந்திருந்தவர்களை இந்த சுயாதீனக் குழுவுக்குள் நீங்கள் உள்வாங்கியதன் விளைவுதான், இந்த சாத்திய மற்ற – தந்திரோபாய – அணுகு முறை போலும்.

ஏதோ செய்து முடியுங்கள். நல்லன விளைந்தால் நன்மை தான்...!

- மின்னல் -

காலைக்கதிர் Kalaikathir



## தமிழ் பொது..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமயத் தலைவர்கள், புத்தி ஜீவிகள், அரசியல் ஆய்வாளர்கள், புலமைசார் வல்லுநர்களை உள்ளடக்கிய தமிழ் சுயாதீனக் குழுவே சம்பந்தனை நேற்று அவரது இல்லத்தில் சந்தித்தது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தமது தீர்வு யோசனையாது என்பதை எழுத்தில் விவரமான உத்தரவாதமாகத் தருவதற்கு இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளினதும் வேட்பாளர்கள் மறுத்துள்ள நிலையில் –

தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தித் தமிழர்களின் அபிலாஷைகளை அதன் மூலம் இத்தேர்தலில் பிரதிபலிக்கச் செய்யவும் –

ஜனாதிபதித்தேர்தல்தொடர்பில் தமிழ்க் கட்சிகள், அமைப்புக்கள் ஒன்றுபட்டுச் செயற்படவும் –

இணங்க வேண்டும் என சுயாதீனக்குழு சம்பந்தனை வலியுறுத்தியதாக அறியவந்தது.

தமிழர்களின் பொது வேட்பாளராக சம்பந்தன் களமிறங்க வேண்டும் என்ற கோரிக்கையும் அவர்களினால் முன்வைக்கப்பட்டதாக அறியவந்தது.

சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுயாதீனப் பிரதிநிதிகள் மாறிமாறி முன்வைத்த கருத்துக்களை சம்பந்தன் ஆழ்ந்து செவிமடுத்தார் எனத் தெரிகின்றது.

பொது வேட்பாளரைத் தமிழர் தரப்புக் களமிறக்குவது பற்றிய கோரிக்கைக்கு சம்பந்தனின் பதில் பின்வருமாறு அமைந்ததாக உள்வீட்டு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

"உங்களின் இந்தக் கோரிக்கை குறித்து நானும் யோசிக்கிறேன். நீங்களும் யோசியுங்கள்.

"இது குறித்து நான் தனித்து முடிவு எடுக்க முடியாது. எனது இலங்கைத்தமிழரசுக் கட்சியுடன் நான் பேச வேண்டும். அதன் பின்னர் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் நான் விரிவாகக் கலந்துரையாடித்தான் நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும்.

'பார்ப்போம். உங்கள் யோசனை குறித்துப் பரிசீலிப்போம்." – என்றாராம் சம்பந்தன்.

இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழர் தரப்பு ஒற்றுமைப்பட்டு – ஐக்கியமாக – ஒரு குரலில் அணுகவேண்டும் என்ற யோசனை தொடர்பில் சம்பந்தனின் பதில் பின்வருமாறு அமைந்தது:-

"எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவை எடுப்பது நல்லது. தமிழ் மக்களுக்கு ஒற்றுமையே ஒரே பலம். அதையே நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அந்த ஒற்றுமையின் நிமித்தம்தான் இன்று நாடாளுமன்றத்தில் தமிழர்களாகிய நாம் 18 உறுப்பினர்களைக் கொண்டுள்ளோம். அவர்களில் 14 பேர் ஒன்றாக – கூட்டமைப்பாக – உள்ளோம். நானும் எப்போதும் ஒன்றுபட்டே நிற்பதையே வலியுறுத்துகிறேன்.

"ஆனால், இந்த விடயத்தில் ஓர் ஆபத்து இருப்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"நாங்கள் – தமிழர்கள் – இந்த விடயத்தில் ஒன்றுபடுகின்றோம் என ஆரவாரப்படுத்தினால் அதைக் காட்டியே தென்னிலங்கையில் பேரினவாத சக்திகள் சிங்கள மக்களை எங்களுக்கு எதிராக ஒன்று திரட்டும் ஆபத்து உள்ளது.

"தென்னிலங்கையைத் தமிழர்களுக்கு எதிராக உசுப்பிவிடும் பாங்கில் அமையாத வகையில் எமது ஒற்றுமை முயற்சி – ஐக்கியத்துக்கான நகர்வு – முன்னெடுக்கப்பட வேண்டும். அதைக் கவனித்துக் கொள்ளுங்கள்!" – என்று சம்பந்தன் குறிப்பிட்டார் என அறியவந்தது. (உ)

## சுயாதீனக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி சுயாதீனத் தமிழ்க் குழுவை உருவாக்கியதாகக் கூறப்படும் தமிழ் மக்கள் பேரவை இவ்விடயம் தொடர்பாக நேற்று விடுத்த ஊடக அறிக்கையில் கூறப்பட்டவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் பொதுவான தீர்மானத்தை எட்டும் வகையில் தமிழ் மக்கள் பேரவையினால் சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள், அரசியல் ஆய்வாளர்கள், புலமைசார் வல்லுநர்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்ட சுயாதீனக்குழு தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகளை சந்திக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

மேற்படி சுயாதீன குழுவில் –

சுவாமி சிதாகாசானந்தா (சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்), அதிமேதகு பொன்னையா ஆண்டகை (ஆயர், திருகோணமலை மறைமாவட்டம்), தென் கயிலை ஆதீன சுவாமிகள் தவத்திரு அகத்தியர் அடிகளார், அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் (குருமுதல்வர் யாழ். மறை மாவட்டம்), சட்டத்தரணி சி.அ.ஜோதிலிங்கம் (சமூக மற்றும் அரசியல் ஆய்வாளர்), பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் (தலைவர், அரசறிவியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்), கலாநிதி கு.குருபரன் (தலைவர், சட்டத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), திருமதி. கோசலை மதன் (விரிவுரையாளர், சட்டத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), நிலாந்தன் (அரசியல் ஆய்வாளர்), குருநாதன் (சமூக செயற்பாட்டாளர், மட்டக்களப்பு), கஜன் (சமூக செயற்பாட்டாளர், திருகோணமலை) வைத்தியர் சிவபாலன் (மருத்துவர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் எப்படிக் கையாள்வது என்பது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் ஒருமித்த முடிவை எடுக்கும் வகையில் மேற்படி சுயாதீன குழுவின் அங்கத்தவர்கள் நேற்று மதியம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சந்திப்பு சுமார் மூன்று மணித்தியாலங்கள் நீடித்தமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து நேற்று மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமுடனான சந்திப்பும் இடம்பெற்றது. இச்சந்திப்பில் கட்சியின் செயலாளர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன், சட்டத்தரணி சுகாஷ் ஆகியோரும் உடன் இருந்தனர்.

மேற்படி இரண்டு சந்திப்புக்களிலும் சுயாதீனக் குழுவின் சார்பில் யாழ் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா, திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதிமேதகு பொன்னையா ஆண்டகை, தென் கயிலை ஆதீன சுவாமிகள் தவத்திரு அகத்தியர் அடிகளார், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார், சட்டத்தரணியும் சமூக மற்றும் அரசியல் ஆய்வாளருமான சி.அ.ஜோதிலிங்கம், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், சமூக செயற்பாட்டாளர் கஜன், வைத்தியர் சிவபாலன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

குறித்த இரண்டு சந்திப்புக்களும் சுமுகமாக இடம்பெற்றன. இதேவேளை இன்று நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியினருடனான சந்திப்பு இடம்பெறும். தொடர்ந்து ஏனைய அரசியல் கட்சிகளுடனான சந்திப்புக்களும் இடம்பெறவுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையால் அமைக்கப்பட்ட குழுவானது சுயாதீனமாக இயங்கும் என்பதுடன் சூழ்நிலைகளுக்கு ஏற்ப புத்திஜீவிகள், புலமைசார் வல்லுனர்களை குழுவில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் சுயாதீனக் குழு மேற்கொள்ளும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீராவியடியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில்லை. ஆரம்பத்திலிருந்து குருகஹந்த என்ற பௌத்த விகாரை மாத்திரமே காணப்பட்டது என்று மஹிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள அவருடைய இல்லத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு – நாயாறு குருகஹந்த விகாரை தொடர்பில் ஆராய்ந்து அதன் வரலாறு மற்றும் உண்மைத்தன்மையை அறிந்துகொண்ட பின்னரே இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் கருத்து வெளியிட வேண்டும். அவ்வாறின்றி இதனைப் பயன்படுத்தித் தேவையற்ற விதமாக பௌத்தர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையிலான முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கக் கூடாது

முல்லைத்தீவு நாயாறு பகுதியில் எந்தவொரு இந்து ஆலயமும் இருக்கவேயில்லை. ஆரம்பத்திலிருந்து குருகஹந்த என்ற பௌத்த விகாரை மாத்திரமே காணப்பட்டது. அந்த விகாரையின் விகாரதிபதியே சில இந்து தெய்வங்களின் சிலைகளை குறித்த விகாரையில் வைத்து பூஜித்தார். அதேபோன்று இது பௌத்தர்களின் வணக்கத்திற்குரிய இடமாகவே காணப்பட்டது என்பதற்கு வரலாற்று ரீதியாகவும், தொல்பொருள் திணைக்களத்தினதும் ஆதாரங்கள் உள்ளன.

எனவே வரலாற்றையும், உண்மையையும் சரியாக ஆராயாமல் பௌத்த மற்றும் இந்து மதத்தை மையப்படுத்தி சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிப்பதற்கு எவரும் முயற்சிக்க வேண்டாம். – என்றும் கூறினார்.

## ஆனையிறவு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிநாட்டுப் பயணி ஒருவரை ஏற்றி வந்த ஹையஸ் வானொன்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த ஆதிமூலம் பரமேஸ்வரன் (வயது -49) என்ற சாரதியே விபத்தில் உயிரிழந்துள்ளார். அத்தோடு வானை வாடகைக்கு அமர்த்திப் பயணித்த 50 வயதான சைமன் எனும் பயணியே காயமடைந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்தவர், கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவருக்கு முள்ளந்தண்டு எலும்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் இடுப்பிற்கு கீழே இயங்காத நிலைக்குச் சென்றுள்ளதாகவும் நரம்பியல் மற்றும் எலும்பு தொடர்பான மருத்துவ நிபுணர்கள் தீவிர சத்திர சிகிச்சையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கருணை இல்லம் ஒன்றிற்கு நிதி உதவி வழங்குவதற்காக வெளிநாட்டில் இருந்து இவர் வந்திருந்தார் எனவும் தெரியவருகின்றது.

விபத்துத் தொடர்பான விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வீதிகளைப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களது கிராமத்தில் இதுவரை காலமும் எந்த வீதியும் நிரந்தரமாக புனரமைக்கப்படவில்லை, மத்திய அரசும் சரி, கடந்த ஐந்து வருடங்களாக ஆட்சியில் இருந்த மாகாண அரசும் சரி, தற்போது அதிகாரத்தில் உள்ள கரைச்சி பிரதேச சபையும் சரி, தங்களது கிராமத்தை புறக்கணித்தே வருகின்றன என அவர்கள் குற்றம் சாட்டினர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைக் கிராமமான எங்களது கிராமம் மிக மோசமான உட்கட்டுமானக் குறைப்பாடுகளை கொண்டுள்ளது. இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபைக்கோ சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கோ பல தடவைகள் எடுத்துக் கூறியும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்த அந்தக் கிராமப் பொது மக்கள், அரசியல் ரீதியாகவும் வேறு காரணங்களுக்காகவும் தங்களது கிராமத்தைப் புறக்கணிக்க வேண்டாம் என சம்பந்தப்பட்ட திணைக்களங்களைக் கோருகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான பொது மக்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர்.

## தமிழர்களின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வீ.கே.சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகமும் அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த தின நிகழ்வு யாழ் நகரிலுள்ள காந்தி நினைவுத்தூபி முன்பாக நேற்று நடைபெற்றது.

இதன் போது காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியாவின் சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் மகாத்மா காந்தி செயற்பட்டிருந்தார். அவர் உலகத்திற்கு எடுத்துக் காட்டிய சுதந்திரமும் விடுதலையும் ஈழத் தமிழர்களுக்கும் கிடைக்க வேண்டும். அதற்கு இந்தியா வழியேற்படுத்த வேண்டும்.

எங்கள் அபிலாசைகள் பூர்த்தியாகாத நிலையில் அந்த அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றே நாம் கோரி வருகின்றோம். குறிப்பாக இலங்கை, இந்திய ஒப்பந்தம் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமலே இருக்கின்றது.

இவ்வாறான நிலையிலும் தமிழ் மக்கள் தமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றே கேட்கின்றனர். குறிப்பாக இன்றைய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழ் மொழி மீதும் தமிழ் மக்கள் மீதும் அக்கறையும் பற்றுறுதியும் கொண்டு செயற்பட்டு வருகின்றார்.

ஏனெனில் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையிலேயே 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்று அவர் கூறியிருக்கின்றார்.

அவ்வாறு தமிழ்மொழியிலும் தமிழ் மக்களிடத்திலும் கொண்டிருக்கின்ற பற்றுறுதி காரணமாக எங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்தியா உதவ வேண்டுமென்று நாம் கோருகின்றோம். ஆகவே நாம் விடுதலை பெற்று சுதந்திரமாக வாழ்வதற்கு இந்தியா வழியேற்படுத்திக் கொண்டுக்க வேண்டும். – என்றார்.

## கோட்டாவிடம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு ஏற்றுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், அந்த மனுவில் கோரிய இடைக்கால உத்தரவை வழங்குவதா என்பது தொடர்பில் தனது விசாரணையை நேற்று ஆரம்பித்தது.

அந்த விசாரணை மீண்டும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும்.

நேற்றைய விசாரணையின் போது எதிர்மனுதாரரான கோட்டாபயவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ருமேஷ் டி சில்வா, இந்த வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணை செய்ய முடியாது என்ற பூர்வாங்க ஆட்சேபனையைக் கிளப்பினார்.

எனினும், மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகள் வாதத்தின் பின்னர், பிறிதொரு தினத்தில் அந்த பூர்வாங்க ஆட்சேபனை மீது முடிவு எடுக்கப்படும் என நீதியரசர்கள் தெரிவித்தனர்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மேற்படி சான்றிதழ் வழங்கப்பட்டமை தவறானது என மனுதாரர் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ வாதிட்டார்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, அமைச்சரவை இல்லாத சமயத்தில் ஜனாதிபதி அமைச்சர்களின் பொறுப்புகளை ஏற்று, தம்பாட்டில் அத்தகைய இரட்டைப் பிரஜாவுரிமைச் சான்றிதழை வழங்க முடியும் என வாதிட்டார்.

விசாரணை இன்று மதியத்துக்குப்பின்னர் தொடரும். இடைக்காலத் தடை தொடர்பான தனது முடிவை நீதிமன்றம் நாளை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாடுகளின் கீழ் இலங்கைக்கான சேவைகளில் ஈடுபடும் வெளிநாட்டு விமான நிறுவனங்கள், உள்நாட்டு விமான நிலையங்களுக்கு போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது.

எனினும், வெளிநாட்டு விமான நிறுவனங்கள், உள்நாட்டு விமான நிலையங்களுக்கு சேவையை நடத்துவதற்கு ஓர் ஆண்டு செயற்பாட்டு அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம், மத்தல சர்வதேச விமான நிலையங்கள், மட்டக்களப்பு, இரத்மலானை விமான நிலையங்களுக்கு வெளிநாட்டு விமான நிறுவனங்கள் சேவையில் ஈடுபட முடியும்.

சிறிய விமானங்களைப் பயன்படுத்தி இந்திய விமான நிறுவனங்கள் யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கான விமான சேவைகளை ஆரம்பிக்கும் என்று இலங்கை எதிர்பார்க்கிறது.

இந்த நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதி பயனுள்ளதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

## கோட்டா மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெந்தர, எல்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அதனை கோட்டாபய ராஜபக்ஷவினால் மாத்திரமே செய்ய முடியும். எனினும், ஒரு தரப்பினர் தற்போது அவரையிட்டு அச்சமடைந்துள்ளனர். சஜித் பிரேமதாஸ அச்சமடைந்துள்ள அளவுக்கு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன எனவும் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online


## ஈழத் தவிர எல்லாம் தருவராம் சஜித் அந்த 'எல்லாம்' என்பதுதான் எதுவோ?

காலம் காலமாகத் தென்னிலங்கையிலிருந்து இலங்கையை ஆட்சி செய்து வரும் ஏனைய தலைவர்களினின்றும் தானும் வேறுபட்டவர் அல்லர் என்பதை சஜீத் பிரேமதாஸாவும் ஒரு வகையில் நிரூபித்தே வருகின்றார்.

"எனது தந்தை ரணசிங்க பிரேமதாஸா தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக ஈழம் தர மாட்டேன், மற்றைய எல்லாம் தருவேன் எனக் கூறியிருந்தார். எனது தந்தையின் கூற்றுப்போன்று தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்க நான் தயாராக உள்ளேன்."

– இவ்வாறு ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸா கூறியிருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

மக்கள் முன்னேற்றக் கூட்டணியின் பொதுச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் மற்றும் அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்தபோதே அவர்களிடம் சஜித் இந்த விடயத்தைக் கூறினார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

"ஈழத்தை விட மற்றெல்லாம் தரத் தயார்" – என்ற கூற்று ரணசிங்க பிரேமதாஸா மட்டும் கூறிய விடயம் அல்ல.

2005 நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலில்வென்று முதல் தடவையாக நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சமயத்தில் விடுதலைப் புலிகளை சமரசப் பேச்சுக்கு அழைத்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலும் இதுதான் இருந்தது.

"ஈழத்தைத் தரமாட்டேன். மற்றெல்லாம் தரலாம். 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் செல்வேன்." – என்றுதான் மஹிந்தரும் குறிப்பிட்டிருந்தார்.

"ஈழத்தை விட மற்றெல்லாம் தரத் தயார்" என்று கூறிய ரணசிங்க பிரேமதாஸாவும், மஹிந்த ராஜபக்ஷவும் கடைசியாகத் தமிழர்களுக்குத் தந்தது என்ன?

போரழிவும், பேரழிவும்தான்!

இந்த இருவருமே, ஈழத்தை விட மற்றெல்லாம் தரத் தயார் என்று கூறினார்களே தவிர, அந்த 'மற்றெல்லாம்' என்பது என்னவென்று, என்றைக்குமே கூறவில்லை.

அதே சொல்லாட்சியை இப்போது தூக்கிப் பிடித்துத் தந்தை வழியில் மீண்டும் ஒரு தடவை காதில் பூச்சுற்ற முற்படுகின்றார் மகன் சஜித் பிரேமதாஸா.

அவருக்கு அல்லக்கைகளாகவும், செம்பு தூக்கிகளாகவும் இப்போது புறப்பட்டுவிட்ட நம்மவர்களும் கூட, அந்த ஈழத்துக்கு மாற்றான 'மற்றெல்லாம்' என்பது எதைக் குறிப்பிடுகின்றது என்பதை அவரிடம் கேட்டுத் தெளிவு பெற்று வரவில்லை.

மாறாக, ஈழம் அல்லாத மற்றெல்லாத்தையும் அவர் தந்து விடுவார் என்ற அவரின் கயிற்றை விழுங்கிக் கொண்டு வந்து எம்மிடம் – எங்களுக்கு – கயிறு விடப் பார்க்கின்றமை இன்னும் வேதனையானது.

"கூடுதல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பேன்" – என்ற வெற்றுக் கூற்று அர்த்தமற்றது.

காலத்துக்குக் காலம் வரும் ஜனாதிபதிகளும், நாடாளுமன்றங்களுக்கும் தமது விருப்புக்கும் முடிவுக்கும் அமைய அதிகாரங்களைப் பகிரவும், பிடுங்கவுமான ஏற்பாடு எமக்குத் தேவையில்லை.

நிரந்தரமான – நியாயமான – நீதியான – நிலைத்து நீடிக்கக் கூடிய – அதிகாரப் பகிர்வுக் கட்டமைப்பு ஒன்றை நாடியே கடந்த எழுபது ஆண்டு காலமாக அஹிம்சை ரீதியிலும், ஆயுத வழிமுறையிலும் தாங்க முடியாத துயரங்களையும் சொல்லொணாத் துன்பங்களையும், இழப்புக்களையும் சுமந்தபடி போராடிக் கொண்டிருக்கின்றது தமிழினம்.

அந்த இனத்துக்கு, காலம் காலமாகத் தென்னிலங்கை அரசுத் தலைவர்கள் பேசும் ஏமாற்று மொழிப் பாணியில் 'கூடுதல் அதிகாரங்களை வழங்குவேன்' என்ற கூற்று மூலம் காதில் பூச்சுற்றி விடலாம் என்று சஜித் பிரேமதாஸா உட்பட எந்தத் தென்னிலங்கைத் தலைவர்களும் இனியும் நம்பிக்கை கொள்ளக் கூடாது.

இந்த இலங்கைத் தீவையே பெரும் உலுப்பு உலுப்பி பேரழிவைத் தந்த உள்நாட்டுக் கோர யுத்தத்துக்கு நாட்டின் தேசிய இனப்பிரச்சினையே காரணம்.

புரையோடிப் போயிருக்கும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் தமது கருத்து இதுதான் என்று கால் நூற்றாண்டுகளுக்கு மேல் தென்னிலங்கையில் அரசியல் செய்யும் சஜித் பிரேமதாஸா இன்னும் – இன்று வரையும் மூச்சுவிட்டார் இல்லை.

இத்தகைய வழியில்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும், தீர்வு காண வேண்டும் என்று எப்போதும் கூறினார் அல்லர் அவர்.

அப்படிப்பட்டவர் 'ஈழம் தவிர எல்லாம் தருவேன். கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பேன்!' – என்று பொதுவில் பேசுகின்றமையை பெரிய விடயமாக தூக்கிப்பிடிக்கும் இடைத் தரகர்கள் போன்ற அரசியல்வாதிகள் முதலில் அவர் தமிழருக்கு முன்வைக்கும் தீர்வு இதுதான் என்று அவரிடம் கேட்டுத் தெளிவு பெற்றுக் கொண்டு எமது மக்களிடம் வரவேண்டும்.

அதைவிடுத்து, அவர்களின் காதில் சஜித் பிரேமதாஸா சுற்றும் பூவை, அவர்கள் எடுத்து வந்து எமது – எங்கள் தமிழ் மக்களின் – காதில் சுற்ற முற்படக் கூடாது. அது தவறாகும்.

## வவுனியாவில் மாணவர்களை ஒன்றிணைத்து விழிப்புணர்வு துவிச்சரக்கரவண்டிப் பேரணி!







வவுனியா, ஒக். 03

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் 'பிள்ளைகளின் வெற்றிக்கான நட்பான நாடு' எனும் தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் விழிப்புணர்வு துவிச்சக்கரவண்டி பேரணி ஒன்று இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக பாடசாலை மாணவர்களின் துவிச்சரக்கரவண்டி பேரணியை வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார் கொடியை அசைத்து ஆரம்பித்து வைத்தார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக ஆரம்பமான இந்தப் பேரணியானது வவுனியா மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனிபாவின் சிறுவர் தின ஆசியுரையைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் திறன் விருத்தி செயலமர்வும் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெ.ஜெயகெனடியின் தலைமையில் இடம்பெற்ற இந்தத் துவிச்சக்கரவண்டி பேரணியில் வவுனியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர் நா.கமலதாசன், ஓமேகா நிறுவனத்தின் அதிகாரிகள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், அரச மற்றும் அரசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வவுனியா நகரசபை பொது நூலகத்தில் இலத்திரனியல் நூலகம் திறந்து வைப்பு





வவுனியா நகரசபை பொது நூலகத்தில் இலத்திரனியல் நூலகப்பிரிவு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இலத்திரனியல் நூலகப்பிரிவை நகரசபை தவிசாளர், உபதவிசாளர், நகரசபை உறுப்பினர்கள் இணைந்து திறந்து வைத்தனர்.

இலத்திரனியல் நூலகப்பிரிவுக்கு நகரசபையினால் எட்டரை லட்சம் ரூபா நிதியொதுக்கிட்டில் கணணிகள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. நகரசபை தவிசாளர் இ.கௌதமனின் தனிப்பட்ட நிதியில் கணிணியொன்றும் கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை செயலாளர் இராசையா தயாபரனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகரசபை தவிசாளர் இ.கௌதமன், நகரசபை உபதவிசாளர் சுந்தரம் குமாரசுவாமி, நகரசபை உறுப்பினர்கள், நூலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 03

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் –**

பாலாவோடை இணுவில், டச்சு வீதி சங்குவேலி, ஆர்க் வீதி உடுவில், உடுவில் மகளிர் கல்லூரி பிரதே சம், சங்குவேலி, வெற்றிலைக்கேணி முள் ளியான் இராணுவ முகாம் பிரதேசம் ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் –**

சின்னத்தம்பனை, வீரபுரம், கெலசியம்பலாவ, நேரியகுளம், பெரிய நொச்சிக்குளம் ஆகிய இடங்களிலும்–

**மன்னார் பிரதேசத்தில் –**

தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், பாலியாறு, மூன்றாம்பிட்டி, தேத்தாவடி, அந்தோனியர்புரம், இலுப்பைக் கடவை, கள்ளியடி, விடத்தற் தீவு, பள்ளமடு, கோவில்குளம், கூராய், அகத்திமோட்டை, சேதுவிநாயகன் குளம் ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்

– என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

**நாளை** 04.10.2019 வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: கேட்டை மு.இ 6.22 வரை
திதி : ஷஷ்டி பி.ப 3.17 வரை
இராகுகாலம் : 10.32 – 12.02
சுப நேரம் : 6.02 – 7.32

# புதிய அதிபர்களின் நியமனத்தில் தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கு அநீதி

## பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றம் செல்லத் தீர்மானம்

கொழும்பு, ஒக். 03

அண்மையில் வழங்கப்பட்ட புதிய அதிபர் நியமனத்தில் தமிழ் பேசும் சமூகத்திற்கு மிகப் பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நவாஸ் சௌபி தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் வெளியாகிய இலங்கை அதிபர் சேவை தரம் 111 க்கான நியமனத்தில் தமிழ் மொழி பேசும் சமூகத்திலிருந்து 510 பேருக்கு நேர்முகப் பரீட்சைக்கான தகுதிகாண் கிடைத்திருந்தது.

இதில் சிங்கள மொழியில் உள்ளவர்கள் 3 ஆயிரத்து 300 பேரும் தமிழ்மொழியில் உள்ளவர்கள் 610 பேருமாகதான் இந்த நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

நேர்முகப்பரீட்சை தேர்வில் உள்ள அனைவரும் இலங்கையில் உள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களில் எண்ணிக்கையின் அடிப்படையில் நிச்சயமாக நியமனத்துக்கு தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள் என்று நம்பி இருந்தோம்.

ஆனால் இறுதியில் இந்த 510 தமிழ்மொழி மூலமாக தெரிவானவர்களில் 167 பேர் தான் நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருப்பது தெரிய வந்தள்ளது. எங்களுக்கு நேர்ந்த மிகப்பெரிய அநீதியாகவே இதைப் பார்க்கின்றோம்.

தெரிவான 167 பேரில் 34 முஸ்லிம்களும் 133 தமிழர்களும் உள்ளடங்குகிறார்கள். ஏனைய நியமனம் பெற்றவர்களில் ஆயிரத்து 700 பேர் சிங்கள சகோதர்களாவர். எனவே இது மிகவும் வித்தியாசத்தை சமூக ரீதியாக, உள ரீதியாக வேறுபாட்டை காட்டுவதுடன் எம்மை ஓரங்கட்டி புறக்கணிப்பு செய்திருப்பதாகவே இந்த நியமனம் சொல்லிக் காட்டுகின்றது.

இலங்கை அதிபர் சேவை சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் நியமனங்கள் பொதுவாக சிங்கள மொழி ரீதியாகவும் தமிழ் மொழி ரீதியாகவும் தனித்தனியேவெற்றிடங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறுதான் இப்பதவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் வர்த்தமானியில் தமிழ்மொழி மூலமாகவும் சிங்கள மொழி மூலமாகவும் நியமனங்களுக்கான வெற்றிடங்களை ஆள்சேர்ப்பு செய்வதிலும் அதிபர் சேவை பிரமாணக் குறிப்பை மூடுகின்ற வகையில்நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

அதனால் தமிழ் பேசும் மக்களுக்கு சமூகத்திற்கு மிகப் பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இது ஒரு வகையில் திட்டமிட்ட அரசியல் நியமனமாக பார்க்கின்ற அளவுக்கு இருக்கின்றது. எனவே இந்த நடவடிக்கை தொடர்பாக நாடுமுழுவதும் பாதிக்கப்பட்டவர்களை ஒன்றிணைத்து நாங்கள் எங்களுக்கு தமிழ்மொழிமூலமாகத்தான் இந்த நியமனத்தை வழங்க வேண்டும் என்பது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் ரீதியாகவும் சட்டரீதியாகவும் முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையில் மாவட்ட ரீதியாக பல உதவிகளை செய்து மனித உரிமை ஆணைக்குழுவில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் ஒன்றாகச் சென்று தங்களுடைய முறைப்பாடுகளை தனித்தனியே செய்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் அம்பாறை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கான பாதிக்கப்பட்ட ஆசிரியர் சமூகம் இந்த இடத்திலே சாய்ந்தமருதில் ஒன்று கூடினார்கள்.

மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்வதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொண்டு இன்று வியாழக்கிழமை கொழும்பில் ஒன்று கூடல் ஒன்றை மேற்கொண்டு ஏனைய இடங்களில் பாதிக்கப்பட்டவர்களை அணுகி உயர் நீதிமன்றத் தில் எங்களுக்கு ஏற்பட்ட அநீதிக்காக போராடவுள்ளோம் – என்றார். (ஐ)

# மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த தினம் யாழில் நேற்று














யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ் நகர மத்தியில் அமைந்துள்ள காந்தி நினைவுத் தூபியில் காந்தியின் 150 ஆவது ஜயந்தி தின நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன் போது காந்தியின் உருவச்சிலைக்கு பலரும் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியமையுடன் காந்தி பாடலும் இசைக்கப்பட்டது

இந் நிகழ்வில் மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட், வடக்கு அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், தூதரக அதிகாரிகள் கல்விமான்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்

*(மேலும் செய்திகள் படங்கள் 13 ஆம் பக்கத்தில்)*

# பெரிய வெங்காயத்தின் இறக்குமதி வரி குறைப்பு

*கொழும்பு, ஒக். 03*

*இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்துக்கான சுங்க வரி 39 ரூபாவால் குறைக்கப்பட்டிருப்பதாக வாழ்க்கைச் செலவு குழுவின் தலைவரும் விவசாய, நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதாரம் மற்றும் கடற்றொழில் நீரியல் வள அமைச்சருமான பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.*

*இந்த விலைக்குறைப்பு நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வருவதாக அவர் கூறினார்.*

*சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்ததன் காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதைக் கவனத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)*

# உலக மது ஒழிப்பு தினத்தில் மதுபானச் சாலைகள் பூட்டு

யாழ்ப்பாணம், ஒக்.03

உலக மது ஒழிப்பு தினமான இன்று வியாழக்கிழமை மதுபான சாலைகள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் கட்டளையை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்க நாடு முழுவதும் ஆயிரம் அலுவலகர் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மதுபான நிலையங்களில் விற்பனை செய்தல், மதுபானங்களை ஏற்றிச்செல்லல் மற்றும் விநியோகித்தல் ஆகியன இன்று தடை செய்யப்பட்டுள்ளது. மீறிவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுவரித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார். (ஐ)

## நீராவியடியில் சட்டத்தரணி மீது தாக்குதல்

# அனைத்து ஊடகங்களிடமும் வீடியோ பதிவை பெற பொலிஸாருக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 3

நீராவியடிபிள்ளையார்ஆலய சூழலில் வைத்து சட்டத்தரணி சுகாஷ் உள்ளிட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் ஊடகங்களில் வெளியாகிய காணொலிகள் மற்றும் ஒளிப்படங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அனைத்து ஊடகங்களிடமிருந்தும் காணொலி மற்றும் ஒளிப்படங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதியளிக்கக் கோரி முல்லைத்தீவு தலைமையகப் பொலிஸார் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் ஊடாக விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த முல்லைத்தீவு நீதிவான் எஸ்.லெனின்குமார், அதற்கான அனுமதிக் கட்டளையை பொலிஸாருக்கு வழங்கினார்.

நீதிமன்றின் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை அடையாளம் காட்டுவதற்காக சட்டத்தரணிகள் நீராவியடி பிள்ளையார் ஆலயப் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

அதன்போது சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் மற்றும் மூவர் பௌத்த பிக்குவால் தாக்கப்பட்டனர். இதுதொடர்பில் அன்றைய தினமே சட்டத்தரணி கே.சுகாஷ், முல்லைத்தீவு தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் சட்டத்தரணி சுகாஷ் மீதான தாக்குதல் தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றில் தனியாக பி அறிக்கை ஒன்றை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு முல்லைத்தீவு நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது.


தாக்குதல் நடத்தியவர்களை மன்றில் முற்படுத்தினால் அவர்களை அடையாளம் காட்டத்தயார் என சட்டத்தரணிகளால் மன்றுரைக்கப்பட்டது.

சட்டத்தரணி சுகாஷ் உள்ளிட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் காணொலி மற்றும் ஒளிப்பட ஆதாரங்கள் உள்ளன, அவற்றை வைத்து சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவோம் என்று பொலிஸார் மன்றுரைத்தனர்.

அதனால் வழக்கு விசாரணை எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விக்ரம் லாண்டருடன் தொடர்பு கொள்ளும் முயற்சி இன்னும் கைவிடப்படவில்லையாம்!

## இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவிப்பு



பெங்களூரு,ஒக்.03

நிலவின் தரையில் வீழ்ந்து கிடக்கும் விக்ரம் லாண்ட ரைத் தொடர்பு கொள்ளும் முயற்சியை முழுமையாக இன்னும்நிறுத்திவிடவில்லைஎன்று இஸ்ரோ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கி ஆராய்வதற்காக, சந்திரயான் 2 விண்கலம் மூலம் விக்ரம் லாண்டர் அனுப்பப்பட்டது.

நிலவில் தரையிரங்க 2 கிலோ மீற்றர் தொலைவே இருந்த நிலையில், லாண்டர் உடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதனையடுத்து லாண்டருடன்தொடர்பைஏற்படுத்தும்முயற்சியில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிர மாக ஈடுபட்டு வந்தனர்.



நிலவில் 14 நாள்கள் பகலாகவும் 14 நாள்கள் இரவாக வும் இருக்கும். அதன் படி,கடந்த 21 ஆம் திகதி முதல் நிலவின் தென் துருவப் பகுதியில் இரவு தொடங்கியது. எனவே, இரவு நேரத்தில் சந்திரயான் 2 விண்கலத்தின் லாண்டரை தொடர்பு கொள்ள முடியாது என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

நிலவின் தென் துருவ பகுதியில் இரவு நேரத்தில் நிலவும் கடுமையான குளிர் போன்ற காரணங்களால் விக்ரம் லாண்டரை மீண்டும் தொடர்பு கொள்வது சாத்தியமில்லை என்று கூறப்பட்டது.

இந்தநிலையில் இதுகுறித்துப் பேசிய இஸ்ரோ தலைவர் சிவன், தற்போது நிலவின் தென் துருவ பகுதியில் இரவு இருப்பதால் விக்ரம் லாண்டரை தொடர்பு கொள்ள முடியாது என்றும், மீண்டும் அந்தப் பகுதியில் பகல் வந்தவுடன் லாண்டரைத் தொடர்பு கொள்ளும் முயற்சியை தொடரப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் சந்திரயான்2 விண்கலத்தின் விக்ரம் லாண்டர் தரையிறங்கும் போது ஏற்பட்ட கோளாறு குறித்து ஆராய தேசிய அளவில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு ஒரு மாதத்திற்குள் இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# காந்திஜியின் 150 ஆவது ஜயந்தி தினம் நினைவிடத்தில் தலைவர்கள் மரியாதை





*டில்லி,ஒக்.03*

*மகாத்மாகாந்தியின்150ஆவது பிறந்தநாளையொட்டி ராஜ் காட்டில்உள்ளகாந்தியின்நினைவிடத்தில் பிரதமர் மோடி, சோனியாகாந்தி ஆகியோர்மலர் தூவி மரியாதை செலுத்தினர்.*

*மகாத்மாகாந்தியின்150ஆவது பிறந்தநாளையொட்டி டெல்லி ராஜ்காட்டில் உள்ள காந்தியின் நினைவிடத்தில் பிரதமர்மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.*

*அதனைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் மரியாதை செலுத்தினார். மேலும் பல்வேறுதலைவர்கள்மரியாதை செலுத்தினர்.*

# போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் நடந்த சமரில் பொலிஸ் அதிகாரி சாவு!



பஞ்சாப் மாநிலத்தில் போதைப் பொருள் கடத்தல் கும்பல் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸ் அதிகாரி உயிரிழந்தார்.

பாகிஸ்தானில் இருந்து பஞ்சாப் மாநில எல்லை வழியாக இந்தியாவுக்குப் போதைப் பொருள்கள் கடத்தல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கடத்தல்களைத் தடுக்க எல்லைப் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து பஞ்சாப் மாநில போதை பொருள் தடுப்பு அதிரடி படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், அம்மாநிலத்தின் ஜண்டியாலா நகரில் உள்ள ஜனியா கிராமத்தில் போதைப்பொருள் கடத்தல் கும்பல் பதுங்கி இருப்பதாகப் போதைப் பொருள் தடுப்பு அதிரடி படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து அந்தக் கிராமத்திற்கு விரைந்த பொலிஸார் கடத்தல் கும்பலைச் சுற்றி வளைத்தனர். அப்போது கடத்தல்காரர்கள் பொலிஸாரை நோக்கித் திடீரென துப்பாக்கியால் சுட்டனர். இதை சற்றும்எதிர்பாராத பொலிஸார் சுதாரித்துக்கொண்டு பதில் தாக்குதல் நடத்தினர்.

இருதரப்பினருக்கும் இடையேநடந்த பயங்கர மோதலின் போது, கடத்தல் காரர்கள் துப்பாக்கியால் சுட்டதில் அதிரடி படையைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி குர்திப் சிங் கழுத்தில் துப்பாக்கி குண்டு பாய்ந்து பரிதாபமாக உயிரிழந்தார். ஆனால் துப்பாக்கிச்சூடு நடத்திய கடத்தல்காரர்கள் அனைவரும் அந்த இடத்தில் இருந்து உடனடியாக தப்பிச்சென்று விட்டனர்.

### ஜம்மு காஷ்மீரில் வளர்ச்சி தொடங்கினால்

# பாகிஸ்தானின் 70 ஆண்டு கால திட்டங்கள் தவிடுபொடியாகும்!

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு



வொஷிங்டன், ஒக்.03

ஜம்மு – காஷ்மீரில் ஒருமுறை வளர்ச்சி தொடங்கினால் பாகிஸ்தானின் 70 ஆண்டு திட்டங்கள் தவிடுபொடியாகும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்கா சென்று திரும்பிய நிலையில், வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கர் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். வொஷிங்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அவர், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை குறித்த கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாற்றினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

ஜம்மு – காஷ்மீரில் இந்தியா வளர்ச்சிக்கான பணிகளைத் தொடங்கும் போது, பாகிஸ்தானின் 70 ஆண்டுகாலத் திட்டங்கள் அனைத்தும் தவிடுபொடியாகிவிடும்.

காஷ்மீரில் தற்போது இணையதளம் மற்றும் சமூக வலைத்தளங்களைத் தவறாகப் பயன்படுத்தி இந்திய எதிர்ப்பு சக்திகளை அணிதிரட்டும் முயற்சியைத் தடுக்கும் நோக்கத்தில் கைத்தொலைபேசி வலையமைப்பு முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநிலம் வளர்ச்சிப் பாதைக்கு மாறும்போது எந்த உயிரிழப்பும் இருக் கக்கூடாது என்பதை உறுதி செய்வதற்கே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. – இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக அமெரிக்க வெளியுறவு மந்திரி மைக் பாம்பியோவை அவர் சந்தித்து பேசினார். இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

ரூபாய் 01 இலட்சம் கழிவு
யாழ்ப்பாணத்தில்!
SPECIAL OFFERS
கற்பகவனம் 2
எழுதுமட்டுவாழ்
1 ஏக்கர் - 16 பரப்பு
40 தென்னை 10-15 மாமரம்
40-60 தேக்கு கல் இருக்கை 01 தொகுதி
20 கஜு மரம்
சுற்று முட்கம்பி வேலி படலையுடன்
2 ஏக்கர் - 32 பரப்பு
80 தென்னை 20-30 மாமரம்
80-90 தேக்கு கல் இருக்கை 01 தொகுதி
40 கஜு மரம்
சுற்று முட்கம்பி வேலி படலையுடன்
5 வருட பராமரிப்பு
15 அடி அகலப் பாதை
24 மணிநேர பாதுகாப்பு
மாதாந்த பராமரிப்பு அறிக்கை
விடுமுறை வீட்டிற்கான இடவசதி
துறைசார் வல்லுனர்களின் ஆலோசனை
விளைபொருட்களுக்கான சந்தை வசதி
பொதுவான வசதிகள்
பொதுவிடுதி ~ உணவகம் ~ உடற்பயிற்சிக்கூடம் ~ நீச்சல் தடாகம்
விளையாட்டுத்திடல் ~ நடைப்பயிற்சிக்கான பாதை ~ மீன்பிடி குளம்
முந்திரிகைத் தோட்டம் ~ மூலிகைத் தோட்டம்

078 284 5000 021 492 7778
சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்.
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
GOOD GIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD
Reg. No.: PV 115306

# ஹொங்கொங்கில் பெரும் வன்முறை சீனத் தேசிய தினத்தன்று வெடித்தது!





பீஜிங்,ஒக்.03

சீனாவின் 70 ஆவது ஆண்டு தேசிய தினத்தின் போது ஹொங்கொங்கில் பெரும் வன்முறை வெடித்தது.

சீனாவில் மாசேதுங் தலைமையில் நடந்த கம்யூ னிஸ்டு புரட்சியின் முடிவில் சீன மக்கள் குடியரசு தோற்றுவிக்கப்பட்டதன் 70 ஆம் ஆண்டு விழா – அதாவது சீனாவின் தேசிய தினம் –நேற்றுமுன்தினம் அந்நாட்டில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. சீன தேசிய தினம் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வந்தாலும், இது 70 ஆவது என்பதால் மிகவும் பிரமாண்டமான விழாவாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டது. இதற்காக கடந்த காலங்களில் இல்லாத அளவுக்கு பெருமளவு கொண்டாட்டங்களுக்குத் திட்டமிடப்பட்டன.

அதன்படி தலைநகர் பீஜிங்கில் உள்ள தியான்மென் சதுக்கத்தில் தேசிய தின கொண்டாட்டங்கள் விமரிசையாக நடந்தன. இதனை நேரில் காண, சுமார் ஒரு லட்சம் மக்கள் சீனக்கொடிகளுடன் திரண்டிருந்தனர். விழாவில் சீனப் புரட்சியின் போது, உயிர் நீத்த வீரர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது.

இந்த நிலையில் சீனாவின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும் ஹொங் கொங்கிலும் சீன தேசிய தினம் கொண்டாடப்பட்டது. ஹொங் கொங் கைப்பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் சீன தேசிய தினத்தின் போது சீனாவுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெறுவது வழக்கம்.

ஆனால் ஹொங்கொங்கில் ஏற்கனவே கடந்த 4 மாதங்களாக சீனாவுக்கு எதிராகப் போராட்டங்கள் நடந்து வரும் நிலையில், சீன தேசிய தினத்தைத்துக்க நாளாக கடைப் பிடித்து எதிர்ப்பு பேரணியை நடத்த ஜனநாயக ஆர்வலர்கள் அழைப்பு விடுத்திருந்தனர். அசம்பாவிதங்களைத் தவிர்க்க ஹொங்கொங் முழுவதும் ஆயிரக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன.

எனினும் திட்டமிட்டப்படி ஹொங்கொங் கின் மத்திய நகரம் மற்றும் 6 மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கருப்பு உடைகளை அணிந்து, வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர். ஒருசில இடங்களில் போராட்டக்காரர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் இரு தரப்புக்கும் இடையே மோதல் வெடித்தது.

போராட்டக்காரர்களை விரட்டியடிக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியமையோடு, ரப்பர் தோட்டாக்களைப் பயன்படுத்திச் சுட்டனர். இதனால் ஆத்திரம் அடைந்த போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது பெற்றோல் குண் டுகளை வீசி எறிந்தனர். மேலும் அவர்கள் முக்கிய சாலைகளை ஆக்கிரமித்து பொலிஸாரின் தடுப்பு களுக்கு தீ வைத்தனர்.

இதையடுத்து பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் போராட்டக்காரர் ஒருவரின் நெஞ்சில் துப்பாக்கி குண்டு துளைத்ததாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையே இது குறித்த தகவல் ஹொங்கொங் முழுவதும் பரவியதையடுத்து, போராட்டக்காரர்கள் பொலிஸாருக்கு எதிராக பெரும் வன்முறையில் ஈடுபட்டனர்.

பொலிஸார் மீது கற்களையும், பெட்ரோல் குண்டு களையும் வீசி எறிந்த போராட்டக்காரர்கள் பொலிஸாரின் வாகனங்களுக்குத் தீவைத்தனர். இதனால் ஹொங் கொங் முழுவதும் கலவர பூமியாகக் காட்சி அளித்தது. பொலிஸார் மற்றும் போராட்டக்காரர்கள் இடையிலான வன்முறை சம்பவங்களில் 15 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் ஒருவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

(உ)

# தைவானில் பாலம் இடிந்து விழுந்தது!



தைவான் நாட்டில் பாலம் ஒன்று நிலை குலைந்து விழுந்த சி.சி.டி.வி. காட்சிகள் வெளியாகியுள்ளன.

நன்ஃபங்காவ் என்ற இடத்தில் கடலின் குறுகிய பகுதியில் இருநிலப்பரப்பை இணைக்கும் வகையிலான பாலமே உடைந்து கடலில் விழுந்தது.

பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த எண்ணெய் டாங்கர் லொறி தண்ணீரில் மூழ்கியது. பாலத்துக்கு கீழ் சென்ற 3 மீன்பிடி படகுகள் இடிபாடுகளில் சிக்கியதில் 12 தொழிலாளர்கள் படுகாயம் அடைந்தனர்.

இச்சம்பவத்தில் மாயமான 6 பேரைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பாலம் திடீரென உடைந்து விழுந்ததற்கான காரணம் குறித்து விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

(உ)

# சிறையில் இருந்து தப்பி பதினேழு ஆண்டுகளாக குகையில் வாழ்ந்த கைதி



பீஜிங், ஒக்.03

சிறையில் இருந்து தப்பிய கைதி ஒருவர் 17 ஆண்டுகளாக குகையில் வாழ்ந்த வந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள யுனான் மாகாணம் யோங் ஷான் நகரை சேர்ந்தவர் சாங் சியாங். இவர் பெண்கள் மற்றும் குழந்தைகளை கடத்திய வழக்கில் 2002 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் சில நாள்களிலேயே அவர் கச்சிதமாக திட்டமிட்டு சிறையில் இருந்து தப்பினார். அதன் பின்னர் பல இடங்களில் தேடியும் அவரை பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில் 17 ஆண்டுகளுக்கு பிறகு சாங் சியாங், யோங்ஷான் நகரில் உள்ள ஒரு மலைப்பகுதியில் பதுங்கி இருக்கிறார் எனக் கடந்த மாத இறுதியில் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதன் பேரில் பொலிஸார் தேடுதல் வேட்டையை முடுக்கி விட்டனர். கமரா பொருத்தப்பட்ட ஆளில்லா குட்டி விமானத்தை மலைப்பகுதிக்கு மேல் பறக்க விட்டு சாங் சியாங்கை தேடினர். அப்போது, மலைகளுக்கு நடுவே உள்ள குகையில் மனிதர்கள் பயன்படுத்தும் சில பொருள்கள் இருப்பது தெரிந்தது.

இதையடுத்து பொலிஸார் நேரடியாக அந்த இடத்துக்கு சென்று சோதனை செய்தனர். அப்போது குகையில் பதுங்கியிருந்த சாங் சியாங் பிடிபட்டார். மலைகளுக்கு நடுவே உள்ள குகையை வீடாக பயன்படுத்திய அவர், ஆற்று நீரை பயன்படுத்திகொண்டு, மரங்களை வெட்டி நெருப்பை உண்டாக்கி காட்டில் கிடைத்தவற்றை சமைத்து சாப்பிட்டு ஒரு காட்டு வாசி போலவே வாழ்ந்து வந்துள்ளார். 17 வருடங்களுக்கு பிறகு பிடிபட்ட சாங்கை பொலிஸார் மீண்டும் சிறையில் அடைத்தனர்.

# ஆப்கான் ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 23 தீவிரவாதிகள் சாவு!

காபூல், ஒக்.03

ஆப்கானிஸ்தான் நாட்டில் இராணுவத்தினர் நடத்திய அதிரடி தாக்குதலில் பாகிஸ்தானை சேர்ந்த 6 அல் கொய்தா அமைப்பினர் உள்பட 23 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான் தீவிரவாதிகள் நாட்டின் பல பகுதிகளில் அவ்வப்போது தற்கொலைப்படை தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால் அப்பாவி பொது மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். மேலும், தலிபான்கள் நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு போட்டி அரசாங்கத்தையும் நடத்தி வருகின்றனர்.

தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் மற்றும் ஆப்கானிஸ்தான் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்நிலையில், அந்நாட்டின் ஹெல்மெண்ட் மாகாணத்தில் உள்ள மூசா ஹலா மாவட்டத்தில் தீவிரவாதிகள் பதுங்கி இருக்கின்றனர் என ஆப்கானிஸ்தான் இராணுவத்திற்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்த ஆப்கான் அதிரடிப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்த தேடுதல் வேட்டையில் 23 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்த அதிரடி வேட்டையில் கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் 17 பேர் தலிபான் அமைப்பை சேர்ந்தவர்கள் ,

மேலும் 6 பேர் பாகிஸ்தானை சேர்ந்த அல்கொய்தா தீவிரவாதிகள் என அந்நாட்டு தேசிய பாதுகாப்பு இயக்குநரகம் செய்தி வெளியிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir





# மதுவை ஒழிப்போம்!

சர்வதேச நல்லொழுக்க தினமாகவும், மது ஒழிப்பு தினமாகவும் ஒக்ரோபர் 3 ஆம் திகதி ஐ.நா. சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

போதைக்கு கண்டிப்பாக முற்றுப்புள்ளி என்ற தொனிப்பொருளில் மது ஒழிப்பு தினம் இலங்கையில் கொண்டாடப்படுகிறது.

மேலும் மதுபோதைக்கு எதிராக சமூகத்தை ஒன்று திரட்டும் நோக்கில் பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்களைத் தெளிவுபடுத் துவதற்கான திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மது உணர்வூட்டும் பொருள் அல்ல. உணர்வை, உடலை அழிக்கும் ஒரு நச்சுப் பொருள். மது அருந்துவதால் சுதந்திர உணர்வு தோன்றுவதாகவும், அதிக சக்தி கிடைப்பதாகவும், களைப்பு நீங்குவதாகவும் பலர் நினைக்கின்றார்கள். இளமைப் பருவத்தில் மதுவால் அதிக பாதிப்பு ஏற்படுவதில்லை என்றாலும் பிற்காலத்தில் மதுவினால் பாதிப்புகள் ஏராளம். மது நேரடியாக இரத்தத்தில் கலந்து விடுவதால் மது குடித்தவுடன், சிறிது நேரத்திற்கு உற்சாகம் பிறக்கிறது. மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் நாளடைவில் எல்லா நோய் களையும் கொடுத்து சிறிது சிறிதாக நம்மை அழிக்கிறது.

மதுவின் தீமைகளை உணர்ந்த உலக சுகாதார நிறுவனம் மது நீண்ட நாளைய நலக்கேடு என்றும், தீய செயல் என்றும் கூறுகிறது. மது உடல் நலத்தைக் கெடுப்பதோடு சமுதாயச் சீர்கேடுகளையும் ஏற்படுத்துகிறது.

ஏழைகள், கூலித் தொழிலாளர்கள், கடின உழைப்பாளிகள், கவலைப்படுகின்றவர்கள், மன நிம்மதி இழந்தவர்கள் போன்றவர்களே, அதிகம் மது அருந்துகின்றனர் என புள்ளி விவரங்கள் கூறுகின்றன. சந்தோசத்திற்காக குடிக்க ஆரம்பித்தவர்கள் பிறகு மதுவிற்கு அடிமையாகி விடுவதோடு குடும்பத்தையும் துயரத்தில் ஆழ்த்தி விடுகின்றார்கள். குடிப்



பழக்கம் உள்ள வீட்டுக் குழந்தைகளும் நாளடைவில் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி கெட்டுப் போகும் நிலை ஏற்படுகிறது.

எனவே இளம் குடும்பங்களைச் சின்னாபின்னமாக்கி, சமூகத்தை சீரழிக்கும், இளைஞர்களைப் பலியெடுக்கும் மது அரக்கனை அழிப்போம்.

குடிகாரர்களை குணமுள்ள மனிதர்களாக, மதுவுக்கு அடிமையான இளைஞர்களை மதியுள்ள துடிப்பான சாதனையாளர்களாக மாற்ற திடசங்கற்பம் பூணுவோம்.

**மதுவால் ஏற்படும் பிரச்சினைகள்**

மது மூளையையும், நரம்பு மண்டலத்தை யும் பாதித்து உடல் நலத்தை சீர்குலைக்கிறது.

மது குடிப்பதினால் கல்லீரல் பாதிக்கப்பட்டு கல்லீரல் இறுக்க நோய் (Cirrhosis) ஏற்படுகிறது. பின்னர் கல்லீரல் புற்று நோய் ஏற்படுவதற்கும் காரணமாகிறது.

மது வயிற்றுக்குள் செல்லும் போது குடல் பாதிக்கப்பட்டு இரைப்பை சுழற்சி (Gastritis) ஏற்பட்டு குடலில் புண் ஏற்படுகிறது.

வாய், தொண்டை, உணவுக் குழாய்களில் புற்றுநோய் ஏற்பட வழி வகுக்கிறது.

தோளிலும், காலிலும் தசை நார் இழப்பு ஏற்படுகிறது.

உடலில் சர்க்கரை சத்தைச் சீர்படுத்தும் கணையம் பாதிக்கப்படுகிறது.

அடிக்கடி மறதி ஏற்பட்டு சோர்வு ஏற்படும்.

உயிர்சத்து 'பி' குறைவால் வெர்னிக்சின்ட்ரோம் (Wernike's Syndrome) என்ற நோய் ஏற்பட்டு நடக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

மது அருந்துபவர்களுக்கு மன நோய்கள் பல ஏற்பட்டு மன நோயாளிகளாகி விடும் வாய்ப்பு அதிகமுண்டு.

மது அருந்துபவர்களுக்கு உடலில் நோய் எதிர்ப்பு தன்மை குறைவதால் தொற்று நோய்கள் வந்தால் எளிதில் தீராது.

இன்னும் எத்தனையோ பிரச்சினைகள். அத்தனையும் மதுவினால் ஏற்படுவனவே. மதுப் பிரியர்களே! முதலில் மதுவை குடிப்பீர்கள். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மது மனிதனைக் குடிக்கும் என்பது மட்டுமே உங்கள் நினைவில் நிற்கட்டும்.

**மது அடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் ஹோமியோபதி மருத்துவம்**

மதுவுக்கு அடிமை என்பது உடல் ரீதியான பிரச்சினை மட்டுமல்ல. மனரீதியான, சமூக ரீதியான பிரச்சினையாகும். ஆகவே, இவர்களை குணமாக்க உளவியல் ரீதியாகவும் அணுக வேண்டியது அவசியம். அந்த வகையில் ஹோமி யோபதி மருந்துகள் உடலில் மதுவினால் உண்டான நலக்கேடுகளை சீர் படுத்துவதோடு மனரீதியான தூண்டுதல்களையும் சரி செய்து நல் வாழ்வுப்படுத்த உதவுகிறது.

ஹோமியோபதியில் மது பழக்கத்தை ஒழிக்க பல மருந்துகள் இருந்த போதிலும் கொர்கஸ் கிளாண்டஸ் ஸ்பிரிடஸ் (Quercus Glandus spritus Q) எனும் மருந்து மதுவினால் உண்டான கோளாறுகள், தலைச்சுற்றல், நடுக்கம் போன்றவைகளை குணமாக்க உதவுவதோடு மதுவை மறக்கவும் துணை புரிகிறது.

மதுப்பழக்கம் ஏற்படுத்தும் நரம்புத் தளர்ச்சி, மன ரீதியான பிரச்சினைகள், குழப்பம், தூக்க மின்மை போன்றவைகளைக் குணப் படுத்த அவினா சடைவா என்ற மருந்தும், எப் போதும் எரிச்சலுடன் கூடிய மனநிலையுடனும் தலைவலி, காலையில் எழுந்த உடன் தலைச்சுற்றல், கண்களில் கூச்சம் போன்ற தொல்லைகளுக்கு நக்ஸ்வாமிகா போன்ற மருந்துகள் சிறந்தவை. இம்மருந்துகளை தொடர்ந்து டாக்டரின் ஆலோசனையின்படி உட்கொண்டால் மதுப்பழக்கத்திலிருந்து விடுபடுவதோடு மறுவாழ்வு பெறுவது நிச்சயம்.

உலகத்தில் 44 முதல் 67 சதவீதம் வரையிலான சாலை விபத்து இறப்புகளுக்கு குடிபோதையில் வாகனம் செலுத்துவதே முக்கிய காரணம் என்ற அதிர்ச்சித் தகவலை உலக சுகாதார நிறுவனம் ஓர் ஆய்வில் தெரிவித்திருக்கிறது.

அரசே முன்னின்று மதுக்கடைகளை திறந்து விட்டிருக்கிறது. மதுபானக் கடைகளால் அரசுக்கு வருடந்தோறும் பண்டிகைக் காலங்களிலும் ஏனைய நாள்களிலும் பல கோடிக் கணக்கான வருமானம் வருகிறது. அரசே இதை ஒழித்தால்தான் மதுவினால் ஏற்படும் சாவையும் குறைக்க முடியும். ★

**இன்று சர்வதேச மது ஒழிப்பு தினம்**

**ஏழைகள், கூலித் தொழிலாளர்கள், கடின உழைப்பாளிகள், கவலைப்படுகின்றவர்கள், மன நிம்மதி இழந்தவர்கள் போன்றவர்களே அதிகம் மது அருந்துகின்றனர் என புள்ளி விவரங்கள் கூறுகின்றன. சந்தோசத்திற்காக குடிக்க ஆரம்பித்தவர்கள் பிறகு மதுவிற்கு அடிமையாகி விடுவதோடு குடும்பத்தையும் துயரத்தில் ஆழ்த்தி விடுகின்றார்கள்.**

# தேர்தல் விதிமுறைகளை மீறினால் கடுமையான நடவடிக்கை பாயும்!

## தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 03

ஜனாதிபதி தேர்தலில் சட்டவிதிகளை மீறிப் பிரசார விளம்பரங்களை மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கடுமையாக எச்சரித்துள்ளார்.

இந்தத் தேர்தலின்போது சட்டவிதிகளைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்போவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் தேர்தல் செயலகத்தில் ஊடக மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முதலாவது ஊடக சந்திப்பை நடத்திய ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அப்போது தெரிவித்தவை வருமாறு: –

தேர்தல் காலப் பகுதியில் எந்தவிதமான முறை கேடுகளுக்கும் இடமளிக்கப் போவதில்லை எனவும் சட்டம் எதைச் சொல்கின்றதோ அதை உரிய முறையில் நடைமுறைப்படுத்த உறுதிபூண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பிலும், கட்சிகளைப் பிரபலப்படுத்தும் விதத்திலும் வீதிகளின் இருமங்குகளிலும் டிஜிட்டல் விளம்பரப் பலகைகள் மற்றும் சினிமாத் திரையரங்குகளில் விளம்பரக் காட்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தேர்தல் சட்டவிதிகளின்படி டிஜிட்டல் விளம்பரப் பலகை, திரையரங்க விளம்பரம் என்பன தடை செய்யப்பட்டுள்ளன. இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அறிவித்தலின் பின்பும் அதுபோன்ற செயற்பாடுகள் தொடருமானால் அவற்றோடு தொடர்புபட்டவர்கள் மீது தேர்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. – என்றும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதித் தேர்தலில் லியனகேயும் குதித்தார்



கொழும்பு, ஒக். 03

கட்டாருக்கான முன்னாள் ஸ்ரீலங்கா தூதுவரும், ஸ்ரீலங்கா தொழிற்கட்சியின் தலைவருமான ஏ.எஸ்.பி. லியனகேயும் வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என அறிவித்துள்ளார்.

இதற்காக நேற்று தேர்தல்கள் செயலகத்தில்வர் கட்டுப்பணம் செலுத்தினார்.

2017ஆம் ஆண்டு கட்டாருக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட ஏ.எஸ்.பி. லியனகே, டுபாய் சென்ற யோசித ராஜபக்ஷ, றோகித ராஜபக்ஷ ஆகியோரின் பயணப் பைகளைத் தூக்கிச் சென்ற படங்கள் வெளியானமையை அடுத்து, பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

2010, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில்போட்டியிட்ட ஏ.எஸ்.பி. லியனகே, 2010 தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் மூன்றாவது அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார்.

# முல்லையில் முள்ளந்தண்டுவடம் பாதிப்புற்றவர்களுக்கான மருத்துவசேவைக் கட்டடம் ஒட்டுசுட்டானில் திறந்துவைப்பு






முல்லைத்தீவு மாவட்டத்தில், முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான நடமாடும் மருத்துவச் சேவைகள் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், அதற்குரிய கட்டடமும் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்திய சாலையில், நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னாள் வடமாகண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் கோரிக்கைக்கமைய, கடந்த மூன்று வருடங்களாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய, நடமாடும் வைத்திய சேவைக்கான நிதியை, கனடா நாட்டின் புலம்பெயர் தமிழ் அமைப்பான, கனேடியத் தமிழர் தேசியப் பேரவை (NCCT) அமைப்பினர் வழங்கியிருந்தனர்.

எனினும் ஏறக்குறைய கடந்த மூன்று மாதங்களாக இந்த நடமாடும் சிகிச்சைக்கான நிதியில் தடங்கல் ஏற்பட்டிருந்தது.

தொடர்ந்தும் முன்னாள் வடக்கு சுகாதார அமைச்சரின் கோரிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய இந்த நடமாடும் சிகிச்சை சேவைகளை மீண்டும் செயற்படுத்தும் பொருட்டு, சிங்கப்பூர் நாட்டில் வசிக்கும் வைத்தியர் மற்றும் பேராசிரியருமான குபேரன் என்பவர் எதிர்வரும் ஒரு வருடத்திற்கு இச் சிகிச்சை சேவைகளுக்குரிய நிதியை வழங்க முன்வந்துள்ளார்.

இந்த நடமாடும் சிகிச்சை சேவையின் மூலம், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள,180இற்கும் மேற்பட்ட முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள், இன்னும் ஒரு வருடத்திற்கு பயன்பெற முடியும்.

இந்த முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான, நடமாடும் மருத்துவ சேவைகளுக்குரிய கட்டடத்திறப்பு நிகழ்வில், முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மு.உமாசங்கர், முல்லைத்தீவு பிராந்திய சுகாதரா பணிமனை திட்டமிடல்வைத்திய அதிகாரி ப.சத்தியரூபன், ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி கெங்காத ரன் கஜானா, மாஞ் சோலை வைத்திய அதிகாரி செ.கஜன் ஆகியோருடன், வைத்தியசாலைத் தாதியர்கள், முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

northern PC Park
கனினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388




# மகளிர் ரி20 தொடரை கைப்பற்றியது இந்தியா

தென்னாபிரிக்காவுக்குஎதிரான 4ஆவது ரி20 ஆட்டத்தில் 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று இந்திய அணி தொடரையும் கைப்பற்றியது.

மழையால் 17 ஓவர்களாக குறைக்கப்பட்ட நிலையில் முதலில் ஆடிய இந்தியா 140/4 ஓட்டங்களைக் குவித்தது. பின்னர் ஆடிய தென்னாபிரிக்கா 89/7 ஓட்டங்களை எடுத்து தோல்வியடைந்தது.

இந்தியாவின் சுழற்பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் தென்னாபிரிக்க வீராங்கனைகள் சொற்ப ஓட்டங்களுக்கு வெளியேறினர். அந்த அணியில் தஸிம் பிரிட்ஸ் 20 ஓட்டங்களைச் சேர்த்தார். 17 ஓவாகளில் 7 விக்கெட் இழப்புக்கு 89 ஓட்டங்களுக்கு சுருண்டது தென்னாபிரிக்கா.

இந்திய தரப்பில் பூனம் யாதவ் 3, ராதா யாதவ் 2 விக்கெட்டுகளை சாய்த்தனர். இதனால் தொடரை 2 0 என கைப்பற்றியது.

# ரோகித் சர்மாவை ஆரம்பத் துடுப்பாட்டவீரராக களமிறக்குவது எங்கள் நீண்ட கால எதிர்பார்ப்பு




## இப்படிக் கூறுகின்றார் இந்திய அணித் தலைவர் விராட்கோஹ்லி

ரோகித் சர்மாவை டெஸ்ட் போட்டிகளில் ஆரம்ப வீரராகக் களமிறக்குவது இந்திய அணியின் நீண்ட காலத் திட்டம் என அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக நாங்கள் செய்ய விரும்பிய விடயத்தை செய்வதற்கான வாய்ப்பு இது என விராட்கோஹ்லி தெரிவித்துள்ளார்.

நாங்கள் பல வீரர்களுக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரராகக் களமிறங்குவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளோம், மயங் அகர்வால் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக விளையாட தெரிவு செய்யப்பட்டார். கே.எல்.ராகுல் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக விளையாடினார். முரளி விஜயும் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக விளையாடினார் - எனச்சுட்டிக்காட்டியுள்ள விராட் கோஹ்லி, சிறப்பாக விளையாடும் வீரர்கள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக விளையாடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் சம்பியன்ஷிப் என்பதாலும் ரோகித் சர்மா சில காலமாக டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ளமையாலும் ரோகித் சர்மாவை ஆரம்ப துடுப்பாட்ட வீரராகக் களமிறக்க தீர்மானித்துள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ள விராட் கோஹ்லி, டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் தன்னை நிலை நிறுத்திக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ரோகித் சர்மா டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாடத் தொடங்கினால் எங்கள் துடுப்பாட்ட வரிசை மேலும் வலுவானதாக - ஆபத்தானதாக - மாறும் எனவும் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.



# பங்களாதேஷ் 'ஏ' அணி எதிர் இலங்கை 'ஏ' அணி முதல் மூன்று நாள் ஆட்டம் சமநிலையில் முடிந்தது

பங்களாதேஷ் 'ஏ' அணி மற்றும் இலங்கை 'ஏ' அணி ஆகியவற்றுக்கு இடையில் நடைபெற்று வந்த மூன்று நாள்கள் கொண்ட உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் 'ஏ' அணி, இலங்கை 'ஏ' அணியுடன் மூன்று நாள்கள் கொண்ட இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், மூன்று ஒருநாள் போட்டிகளிலும் விளையாடி வருகின்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான மூன்று நாள்கள் கொண்ட உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் ஆரம்பமாகியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பாடிய பங்களாதேஷ் 'ஏ' அணி, முதல் இன்னிங்ஸ்க்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 360 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை 'ஏ' அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 450 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சங்கீத் குரே சதம் கடந்து 104 ஓட்டங்களைக் குவித்து, ஆட்டமிழந்தார். கமிந்து மெண்டிஸ் 169 ஓட்டங்களை எடுத்த நிலையில் மொஹமட் மிதுனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்னர் 90 ஓட்டங்கள் பின் தங்கியவாறு தமது இரண்டாம் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பம் செய்த பங்களாதேஷ் 'ஏ' அணி ஓர் ஓட்டத்தை மாத்திரம் பெற்றுக்கொள்ள போட்டியின் ஆட்ட நேரம் நிறைவுக்கு வந்தது. இதனால், போட்டி சமநிலை அடைந்தது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டி நாளை 4ஆம் திகதி இதே மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

# சிங்கப்பூரின் முத்தரப்பு தொடரில் நேபாளத்தை வீழ்த்திய சிம்பாவே




சிங்கப்பூரில் இடம்பெற்று வரும் முத்தரப்பு 'ருவென்டி 20' தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 4ஆவது போட்டியில் சிம்பாவே அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நேபாளம் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி களமிறங்கிய சிம்பாவே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் வில்லியம்ஸ் 53 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் நேபாளம் சார்பாக லமிச்ஹறன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து 161 என்ற வெற்றி இலக்கை நோக்கித்துடுப்பெடுத்தாடிய நேபாள அணியால், 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இந்நிலையில், சிம்பாவே அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் பண்டாரி 33 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் வில்லியம்ஸ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்தத் தொடரின் ஐந்தாவது போட்டி இன்று சிங்கப்பூர் மற்றும் நேபாளம் அணிகளுக்கு இடையில் இடம்பெறுகின்றது.

# கோட்டா இழைத்த தவறுகளை விளக்குகின்றார் விக்டர் ஐவன்

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக காமினி வியன்கொட, பேராசிரியர் தெனுவர ஆகியோரால் தொடரப்பட்டுள்ள, அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு சம்பந்தமான வழக்குகளைத் தாம் நன்றாக ஆராய்ந்துள்ளார் எனவும், அவருக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உரிமை இல்லை எனவும் சிரேஷ்ட ஊடகவியலாளரான விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

ஏனைய வழக்குகளை ஒதுக்கி வைத்து விட்டு அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு தொடர்பான பிரச்சினையை மட்டும் எடுத்து கொண்டால், கோட்டாபய ராஜபக்ஷ செய்துள்ள குற்றம் பாரதூரமானது. அவர் குடியுரிமை சட்டத்தை மீறியுள்ளார். குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தையும் மீறியுள்ளார். போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ 1976ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் திகதி தேசிய அடையாள அட்டையைப் பெற்றுள்ளார். அதன் இலக்கம் 491724021V, கடவுச்சீட்டின் இலக்கம் N5384975.

அவருக்கு 2003 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி அமெரிக்க குடியுரிமை கிடைத்துள்ளது. குடியுரிமை சட்டத்தின்படி வெளிநாடு ஒன்றில் குடியுரிமை பெற்ற ஒருவரது இலங்கை குடியுரிமை தானாவே இரத்தாகும்.

2005ஆம் ஜனாதிபதி தேர்தல் நடந்த போது, கோட்டாபய அமெரிக்கப் பிரஜையாக தற்காலிக விசா அனுமதியை பெற்றே இலங்கை வந்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நவம்பர் 21ஆம் திகதி இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

துறைக்கு பொறுப்பான அமைச்சர் ஒருவர் கூட நியமிக்கப்படாத நிலையில் துரித கதியில் இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இரட்டை குடியுரிமைக்கான விண்ணப்ப பத்திரத்தில் அவர் தன்னைக் கணனிப் பொறியியலாளர் எனக்குறிப்பிட்டுள்ளார். இதனால், அந்த விண்ணப்பத்திற்கு பொய்யான தகவல்களை உள்ளடக்கியுள்ளார். இதனால், அதுவும் போலி ஆவணம்.

அத்துடன் அவரது புதிய இலங்கை அடையாள அட்டையை (194917210010) கடந்த 2016ஆம் ஆண்டு அமெரிக்க குடியுரிமை இருக்கும் போதே பெற்றுள்ளார்.

சட்டத்திற்கு முரணானப் புதிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டிருக்கும் போதே, 2017, 2018, 2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் செல்லுப்படியற்ற அடையாள அட்டையைப் பயன்படுத்தி வாக்காளராக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவும் வேண்டும் என்றே செய்த பாரதூரமான தவறாக கருத முடியும். அதேவேளை அமெரிக்க குடியுரிமை இருக்கும் போதே கோட்டாபய ராஜபக்ஷ தனது இலங்கை கடவுச்சீட்டை (N192600594) பெற்றுள்ளார்.

இவை அனைத்தும் பாரதூரமான குற்றங்கள். இவை தெரிந்தே செய்த தவறுகளே அன்றி தவறுதலாக செய்தவை அல்ல. சட்டத்தை அமுல்படுத்தும் போது, கோட்டாபய சம்பந்தமாக எப்படியான கொள்கையை பின்பற்றபடும் என்பதை கூற முடியாது.

அதற்கு அமைய அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. இந்த பாரதூரமான குற்றங்களுக்கு தண்டனை கிடைப்பதை தவிர்க்க முடியாது. – என விக்டர் ஐவன் குறிப்பிட்டுள்ளார்.



பிரிட்டிஷ் உள்நாட்டு அலுவலகத்தின் குழுத்தலைவர் செல்வி லிசா கோபல்ட் அண்மையில் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கு விஜயம் செய்து அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதியுடன் உள்ளக இடம்பெயர்ந்தோர் மற்றும் தாயகம் திரும்பும் அகதிகளின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூக மயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் வீடமைப்பு திட்டங்கள், வாழ்வாதார உதவிக்கருத்திட்டம் மற்றும் கண்ணிவெடியகற்றல் செயற்திட்டம் உள்ளடங்கலாக அமைச்சினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி கலந்துரையாடினர்.

# ஊடகங்களிடம் வாய் திறவாமல் இருக்க கோட்டாவுக்கு சட்ட ஆலோசனையாம்!

ஊடகங்களிடம் எதுவும் பேசாமல் ஒதுங்கியிருக்குமாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளதாக, அவரது இணைப் பேச்சாளர்களில் ஒருவரான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த டலஸ் அழகப்பெருமவிடம், கோட்டாபய ராஜபக்ஷ ஊடகங்களைச் சந்திக்காமல் – செய்தியாளர் சந்திப்புகளை நடத்தாமல் – தவிர்ப்பது ஏன் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சட்ட ஆலோசனைகளின் அடிப்படையிலேயே கோட்டாபய ராஜபக்ஷ ஊடகங்களைத் தவிர்த்து வருகிறார்.

ஜனாதிபைத் தேர்தலுக்கு முன்னதாக அவருக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஊடகங்களிடம் இருந்து விலகியிருக்குமாறு, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, சட்டவாளர்கள் ஆலோசனை கூறியுள்ளனர். கோட்டாபய ராஜபக்ஷ ஊடகங்களுக்கு நெருக்கமான ஒருவர். ஆனால் நீதிமன்ற வழக்குகளால் அவர் ஊடகங்களில் இருந்து விலகியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கட்டப்பிராயில் நேற்று முன்தினம் முதியோர், சிறுவர் தின நிகழ்வுகள்





இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் மாலை கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

இருபாலை கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் பாக்கியராசா பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ் மாவட்டச்செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி இணைப்பதிகாரி இரட்ணசிங்கம் அமலன் கலந்துகொண்டார்.

சிறப்பு அதிதிகளாக கிராம உத்தியோகத்தர் எம்.ஆர்.ஜெயதரன், சமுர்த்தி உத்தியோகத்தர் என்.உமாகாந்தன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.மாதவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக கிராம உத்தியோகத்தர் திருசெல்வம் ஜேசுதாஸ், நல்லூர் லயன்ஸ் கழக தலைவர் சின்னத்துரை இலட்சுமிகாந்தன், மக்கள் ஆதரவு மையத்தின் பணிப்பாளர் சண்முகலிங்கம் சுரேந்திரன். உதயம் கலாசார சங்கத்தின் இணைப்பாளர் தியாகராஜா நிசங்கன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வில் கிராம நண்மைக்காக உழைத்த முதியோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கௌரவிக்கப் பட்டமையுடன் சிறுவர்களுக்கான பரிசில் பொருள்களும் வழங்கப்பட்டன.



காலைக்கதிர் Kalaikathir



# தனது தந்தைக்கு அஷ்ரஃப் ஆதரவளித்தமை போல தனக்கு ரவூப் ஹக்கீமும் ஆதரவு என சஜித் புகழாரம்

கொழும்பு, ஒக்.03

எனது தந்தையின் வெற்றிக்கும் தந்தைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட குற்றப் பிரேரணையை முறியடிப்பதற்கும் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் ஒத்துழைப்பு வழங்கியமை போல, தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் தனது வெற்றியை முன்னிட்டு ஆதரவு வழங்குகின்றமையைத் தாம் பெரிதும் மதிக்கிறார் என ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற். – ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடனான – கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களின் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களுடன் அவர் நேற்று சுமார் ஒன்றரை மணி நேரம் கலந்துரையாடினர். .



இதன்போது படையினர் நிலை கொண்டுள்ள மற்றும் வனபரிபால திணைக்களத்தினால் கையகப்படுத்தப் பட்டுள்ள வட, கிழக்கு முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும், வெளியேற்றப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் வட மாகாண முஸ்லிம்களின் நிலைமை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.



புத்தளத்தில் உக்கிரமடைந்துள்ள அறுவைக்காடு குப்பைப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் இங்கு எடுத்துரைக்கப்பட்டது. முஸ்லிம்களுடைய பாதுகாப்பை உரிய முறையில் உத்தரவாதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

கொழும்பு மாவட்ட முஸ்லிம்களின் குடியிருப்புத் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது.



பொதுவாக நாடளாவிய ரீதியில் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றி கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதிநிதிகளாலும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இவற்றுக்கு பதிலளிக்கும்போது ஜனாதிபதி வேட்பாளர் அமைச்சர் சஜித் பிரேமதாச கூறியவை வருமாறு: –

அரசியல் மற்றும் பூகோள ரீதியில் நெருக்கடிகளுக்குள்ளாகியிருக்கும் இலங்கையை உன்னத நிலைக்கு கொண்டு வருதில் நான் கூடுதல் கவனம் செலுத்துவேன்.

நாட்டுப்பிரஜைகளான பௌத்தர்களும், இந்துக்களும், முஸ்லிம்களும் எனது நம்பகத்தன்மை பற்றி கிஞ்சித்தும் சந்தேகிக்கவோ அதுபற்றி இருமுறை சிந்திக்கவோ தேவையில்லை.

தீவிரவாதத்தை நான் ஆதரிப்பவனல்லன். ஆனால், அளுத்கம, அம்பாறை மற்றும் திகண முதலான சம்பவங்கள் ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதலுக்கு வழிகோலியுள்ளன என நம்பப்படுகின்றது.

மேலும், குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் பின்னணியின் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தி இனங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்த தீய சக்திகள் செயற்பட்டுள்ளன.

உண்மையான, நேர்மையான பௌத்தனாக எனது தந்தை என்னை வளர்த்தமையால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று நாட்டில் வாழும் சகல இனமக்களுக்கும் சேவையாற்ற திடசங்கற்பம் பூண்டுள்ளேன் – என்றார்.






## அதாவுட சஜித் பக்கம்



கொழும்பு, ஒக்.03

ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான அதாவுட செனவிரத்ன ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளார்.

நேற்று அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் இடம்பெறும் சஜித் பிரேமதாசவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

## தோல்விக்குப் பயந்து ஐக்கிய தேசியக் கட்சி கோட்டாபயவைக் கைது செய்வதற்கு முயற்சி

### இப்படிக் கூறுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஒக்.03

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்படப் போகும் படுதோல்வியை அறிந்த ஐக்கிய தேசியக் கட்சி கோட்டாபய ராஜபக்ஷவை சிறைப்படுத்தியாவது வேட்பாளர் பதவியிலிருந்து அவரை நீக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட் டியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் மீது பொய்யான குற்றச் சாட்டுக்களைச் சோடித்து அவரது வெற்றியைத் தடுக்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

நாம் எமது வேட்பாளரை வேண்டா வெறுப்புடன் பெயரிடவில்லை. தகுதி இருக்கின்றதா? என நன்கு கண்டறிந்தே நாம் அவரை அறிவித்தோம். ஐக்கிய தேசியக் கட்சி கோட்டாபயவை சிறைப் படுத்தத் தயாராகி வரு கின்றது. இவ்வளவு அச்சப்படுவது ஏன்? – எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்கள் தங்களுடன் இருக்கிறார்கள் என அவர்கள் கூறுவார்களாயின், மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்க அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2019 இல் வெளியிடப்பெற்றது.

# வடக்கில் காந்திஜியின் 150ஆவது ஜயந்தி தின நிகழ்வுகள்










யாழ்ப்பாணம், ஓக். 03

யாழ் இந்தியத் துணைத் தூதரகம் மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, அரியாலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, புங்குடுதீவு ஆகிய இடங்களில. பல்வேறு நினைவு நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது.

காலை 8.00 மணிக்கு பருத்தித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு யாழ் இந்திய பதில் துணைத் தூதுவர் ராமேஸ்வர் பக்தா,பருத்தித்துறை நகரசபை தவிசாளர் மற்றும் பல காந்தியவாதிகள் மலர்மாலை அணிவித்தும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ் மாநகரசபை முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் மற்றும் பல மூத்த காந்தீயவாதிகள் கலந்து கொண்டு மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்தினர். பின்னர் அரியாலை காந்தி சேவா சங்கத்தின் சனசமூக நிலையத்தில் உள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மரியாதை செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை நகரசபையில் இருந்து வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் கோவில் வரை அமைதிக்கான நடைபவனியும் அதனைத் தொடர்ந்து அக் கோவில் கோபுரத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மலர் வணக்கம் செலுத்துதலும் இடம் பெற்றன.

மதியம் 1 மணிக்கு முல்லைத்தீவில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து 2 மணிக்கு கிளிநொச்சியில் காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட பதில் துணைத் தூதுவர் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு புங்குடுதீவில் வட இலங்கை சர்வோதயமும் யாழ் இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து நடத்திய மகாத்மா காந்தியின் பிறந்த நாள் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றமையோடு சர்வோதயத்தினால் நிகழ்த்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. தூதரக அதிகாரிகள், சர்வோதய உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அத்துடன் மகாத்மா காந்தியின் பிறந்தநாள் நிகழ்வுகள் யாழ் இந்தியத் துணைத் தூதரக வளாகத்திலும் இடம் பெற்றமையுடன் மிகப்பெரிய காந்தியின் உருவப்படமும் அங்கு வைக்கப்பட்டது.

*(மேலும் படங்கள் செய்தி 05 ஆம் பக்கத்தில்)*

## இனவாதமே..

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் தேவைக்காக செயற்படுகின்ற புதிய அரசியலை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

எந்தவொரு பொழுதும் நாட்டில் இனவாதப் பிரச்சினை புறக்கணித்தலாகவோ, தனிமைப்படுத்தலாகவோ இடம்பெறக் கூடாது.

மக்கள் அனைவருக்கும் தங்கள் தனித்துவத்தை ஏற்கக் கூடிய, மதிப்பளிக்கக் கூடிய, பாதுகாக்கக் கூடிய உறுதியை நாம் வழங்க வேண்டும். அவர்களுடைய தனித்துவத்தை ஏற்று மதிக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

எங்களிடம் இருக்கும் பேதங்களைக் காட்டி விலகிச் செல்லாமல், மற்றவர்களை மதித்துப் பாதுகாத்து சகோரதரத்துவத்தை கட்டியெழுப்ப வேண்டும். அதற்குத் தேவையான புதிய பாதையை நாம் கட்டியெழுப்புவோம் என நாங்கள் நம்புகின்றோம். வடக்கில் புதிய அழிவிற்கான அரசியலுக்குப் பதிலாக எதிர்கால எதிர்பார்ப்பிற்கான அரசியலை முன்னெடுக்க வேண்டும்.

அத்தகைய எதிர்பார்ப்புடைய அரசியலை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்குக் குடிமக்களும் ஒன்றுபட வேண்டும். நாம் அனைவரும் ஒரே மரத்தில்தான் கட்டப்பட்டுள்ளோம். பல காலமாக இதனால் வேதனைக்கு உட்பட்டுள்ளோம். பல தசாப்தங்களாகக் கட்டப்பட்டுள்ள விலங்குகளை உடைக்கும் காலம் வந்த விட்டது. இன்னல்,வேதனைகளைத் தகர்த்தெறிய வேண்டும். ஆகவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிக்கான பாதையைக் கொண்டு செல்வோம். – என்றார்.

# யாழ். பல்கலை துணைவேந்தர் பதவி; இதுவரையில் நால்வர் விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், ஓக். 03

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, எதிர்வரும் ஒக்ரோபர் 7ஆம் திகதியுடன் விண்ணப்பிப்பதற்கான கால எல்லை நிறைவடையவுள்ள நிலையில், நேற்று வரை 4 பேர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

இவர்களில் இருவர் புலம்பெயர் தமிழ்ப் பேராசிரியர்கள் ஆவர்.

ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த பேராசிரியர் கே. நிரஞ்சன், ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் சாம். தியாகலிங்கம் ஆகியோரே வெளிநாடுகளில் இருந்தவாறு யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருக்கின்றனர்.

இவர்களோடு, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சேவையாற்றும் பேராசிரியர்கள் கலாநிதி எஸ்.சிறீசற்குணராஜா, வேல்நம்பி ஆகியோர் நேற்றுத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

மேலும், இவர்களைவிட யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து மருத்துவ கலாநிதி எஸ். ரவிராஜ், பேராசிரியர்கள் பி. ரவிராஜன், கே. மிகுந்தன் ஆகியோர் தமது விண்ணப்பங்களை விரைவில் சமர்ப்பிக்கவிருக்கின்றனர் என விடயமறிந்த வட்டாரங்களிலிருந்து அறிய வருகிறது.

இதேவேளை, கடந்த 23 நாள்களாக நாடுமுழுவதும் பல்கலைக்கழகங்களின் போதனை சாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் இடம்பெற்று வருவதனால் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்படுமா என்பது குறித்த சர்ச்சை ஒன்று நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.